# திருக்கோயில்




டிசம்பர் 2003

விலை ரூ 7.00





மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தம் ஜூலை மாதச் சம்பளத்தைச் சென்னை அருள்மிகு சக்தி விநாயகர் திருக்கோயில் அன்னதானத் திட்டத்திற்கும், ஆகஸ்ட் மாதச் சம்பளத்தை வல்லக்கோட்டை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் அன்னதானத் திட்டத்திற்கும், செப்டம்பர் மாதச் சம்பளத்தைத் திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் அன்னதானத் திட்டத்திற்கும், அக்டோபர் மாதச் சம்பளத்தை அருள்மிகு ஒப்பிலியப்பன் வெங்கடாசலபதி திருக்கோயில் அன்னதானத் திட்டத்திற்கும் வழங்குகிறார்கள்.



# திருக்கோயில்



திங்கள் இதழ்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 7.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 75.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 1000.00 |

| | | | |
|---|---|---|---|
| மாலை 45 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சுபானு - மார்கழி டிசம்பர் 2003 | மணி 12 |



சிறப்பாசிரியர்

**திருமிகு ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.**
ஆணையாளர்

ஆசிரியர்

**முனைவர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.**

**"திருக்கோயில்" நிர்வாகக் குழுவினர்**

**திருமிகு எஸ். கனகய்யா,** பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

**திருமிகு த. சுந்தரம்,** பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

**திருமிகு ஆ. குப்புசாமி,** பி.ஏ. பிஎல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

**திருமிகு கே.கே. இராஜா,** எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி


முகப்பு

**திருவண்ணாமலை அருள்மிகு உண்ணாமுலை உடனாகிய அருணாசலேசுவரர்**

## பொருளடக்கம்


**கோவில் யானைகளின் ஓய்வுத் திட்டம் – மகத்தான திட்டம்**
- மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள்

**மதுரவாசகம் மொழிந்த மாணிக்கவாசகர்**
- திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப

**திருமந்திர உபதேசம் - "திருமந்திரச் செம்மல்" திருமிகு** டி.வி.வெங்கட்ராமன் இ.ஆ.ப. (ஓய்வு)

**என்னை உனக்கே தந்தேன் முருகா!**
- திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,

**அருள்நிறை அண்ணாமலை**
- முதுபெரும் புலவர் அ. பாண்டுரங்கனார்

**மகாமக விழாவின் சிறப்பு** - முனைவர் த. அமிர்தலிங்கம்

**அறநூல்களும் அருள் நூல்களும் – ஒரு பார்வை**
- முனைவர் இரா. செல்வகணபதி

**திருமகள் வீற்றிருக்கும் திருஇடங்கள்**
பேராசிரியர் த. அகரமுதல்வன்

**திருப்புலிவனநாதர்** - மருதவாணன்

**வைகலும் நீலக்குடியும்** - கண்ணபிரான் எம்.ஏ., பிஎட்.

**ஆரூர் இசைக் கோயிலும் பதினென் இசைக் கருவிகளும்**
எம். விஜயரங்கதுரை எம்.ஏ., எம்.பில்.



*உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி:*

**உயர்திரு ஆணையாளர் அவர்கள்**

***திருக்கோயில்***

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

*119, உத்தமர்காந்தி சாலை, சென்னை - 600 034.*

தொலைபேசி: *28334811, 28334812, 28334813*

# கோவில் யானைகளின் ஓய்வுத் திட்டம் - மகத்தான திட்டம்

- மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர்
திருமிகு பி.சி. ராமசாமி அவர்கள்

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோவில்கள், மடங்கள், தனி நபர்கள் மற்றும் வனத்துறைக்குச் சொந்தமான யானைகளுக்கு புத்துணர்வு அளிக்கும் திட்டம் ஒன்றினை நம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ளார்.

இந்த இணையற்ற திட்டம் 16-11-2003 முதல் தொடங்குகின்றது. 100 யானைகள், அதாவது, திருக் கோவில்களைச் சேர்ந்த 37 யானைகளும், மடங்களுக் கும், தனி நபர்களுக்கும் சொந்தமான 18 யானை களும், வனத்துறையைச் சேர்ந்த 45 யானைகளும் முகாம்கள் வந்தடைந்துள்ளன.

நம் முதல்-அமைச்சர் அவர்கள் விலங்குகளிடத் தில் கொண்டிருக்கும் ஆழ்ந்த கருணையே இந்தத் திட்டத்திற்கு அடிப்படையாக விளங்குகிறது. சிறைப் பட்ட நிலையிலுள்ள யானைகள் இழந்த நலத்தை மீட்பதற்கான இந்த இணையற்ற திட்டம் தொடங்கப் படுவதற்கு நம் முதல் - அமைச்சரின் கருணையே காரணமாகும்.

தொடர் பணிகள், வழக்கமான இயந்திரத்தன மான வேலைகள் ஆகியவற்றிலிருந்து யானைகளை விடுவித்து, இயற்கைச் சூழலில் மற்ற யானை களோடு அவை முழு ஓய்வெடுக்கச் செய்வதற்காகவே இந்த முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. யானைகள் இயற்கையாகவே கூட்டம் கூட்டமாக இருப்பதை விரும்புபவை. தனித்து வாழ்வது அதன் இயல்பு அல்ல.

ஆகவே சிறைப்பட்ட நிலையிலுள்ள யானைகள் உளவியல் ரீதியாக அடிக்கடி பாதிக்கப்படுகின்றன. சிறைப்பட்ட நிலையில் முறைப்படுத்தப்பட்ட உணவு வகைகள், குறைந்த உடல்நலப் பராமரிப்பு ஆகியவற்றோடு யானைகள் கடுமையாகத் தொடர்ந்து வேலை செய்ய அடிக்கடி கட்டாயப்படுத்தப்படு கின்றன. ஓய்வெடுக்கவோ மறு வலிமை பெறுவ தற்கோ அவற்றிற்கு இடைவெளி அளிக்கப்படுவதே இல்லை.

எனவே தான், யானைகளின் உடல்நலம் பேணி, சத்துணவு ஊட்டி, அவற்றிற்கு அமைதியும், ஓய்வும் அளிக்கும் திட்டத்தை தமிழ்நாடு அரசு நிறைவேற்ற வேண்டியது அவசியம் என்று நம் தமிழக முதல்வர் அவர்கள் கருதினார். முகாம்களை எவ்வாறு நடத்த வேண்டும் என்ற விவரங்களை முடிவு செய்வதற்காக அதிகாரிகள் மற்றும் நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்று அவரது ஆணையின் பேரில் நியமிக்கப் பட்டது.

எல்லா அம்சங்களையும் விரிவாக ஆராய்ந்த பிறகு, யானைகள் குளிர்ந்த மற்றும் உடல்நலத் திற்கு உகந்த சூழ்நிலையில் ஓய்வெடுக்கவும், மறு வலிமை பெறவும், டாப்சிலிப், முதுமலை ஆகிய இரண்டு இடங்களில் யானைகளில் நல வாழ்வுக்கான 3 முகாம்களை அமைக்க, அந்தக் குழு தீர்மானித்தது. சமவெளிகளில் நிலவுகின்ற வெப்பத்தை தவிர்க்க வும், யானைகளை தங்களுக்கு இயல்பான சூழலில் இருக்கச் செய்யவும் டாப்சிலிப், முதுமலை ஆகிய இடங்கள் தேர்வு செய்யப்பட்டன.

டாப்சிலிப் முகாம் வனத்துறையைச் சார்ந்த யானைகளைக் கவனித்துக் கொள்ளும். முதுமலை யில் ஒரு முகாம் வனத்துறையைச் சார்ந்த யானை களுக்காகவும் மற்றொரு முகாம் திருக்கோவில்கள், மடங்கள் மற்றும் தனி நபர்களுக்கு சொந்தமான யானைகளுக்காகவும் என இரண்டு முகாம்கள் அமைக்கப்பட்டன.

மருத்துவ பரிசோதனை, முழுமையாகக் குடற் புழு நீக்கம் செய்தல் மற்றும் அந்த்ராக்ஸ் தடுப்பூசி போடுதல் ஆகியவற்றிற்குப் பிறகு, முற்றிலும் தகுதி யான யானைகள் மட்டுமே முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டன.

எந்தவித ஊறும் ஏற்படாத வகையில் முழுப் பாதுகாப்புடன் லாரிகளில் யானைகள் அழைத்துச் செல்லப்பட்டன. ஒவ்வொரு யானையுடனும் அதன் பாகனும் அந்த லாரியில் உடன் சென்றார். இந்த



யானைகளோடு ஒவ்வொரு லாரிக்குப் பின்னும் ஒரு காரில் தனித்தனியே கால்நடை மருத்துவக் குழுக்கள் உடன் சென்றன. லாரிகளில் ஏற்றப்படும் போது யானைகளுக்கு எந்த அசவுகரியமும் ஏற்படக் கூடாது என்பதை உறுதிப்படுத்த தெளிவான அறிவுரைகள் வழங்கப்பட்டன.

முகாம்களில் யானைகளுக்கு சிறப்பான கவனிப்பும் அவற்றின் நலனில் அக்கறையும் காட்டப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்த தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. யானைப் பாகர்கள் தங்குவதற்கும், கால் நடை மையம், மருத்துவ மையம், சமையலறை மற்றும் சரக்கு அறை போன்றவை அமைப்பதற்கும் வனத்துறை வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

பொது சுகாதாரத்தை பேணும் வகையில் முகாம்களுக்கு வந்தவுடன் யானைகளுக்கு தொற்று நீக்கம் செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மருந்துப் பொருள்கள், உணவு மற்றும் பசுந்தீவனம் ஆகியவற்றை வழங்குவதற்கும் முழுமையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முகாம்கள் நடத்தப்படும் காலம் முழுவதும், கால்நடை மருத்துவர்கள் பணிபுரிவார்கள். நான்கு காவல் பரண்கள் உட்பட அனைத்துக் கண்காணிப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

யானைகளுக்கு புத்துணர்ச்சி அளிக்கும் காலத்தில் சிறந்த சத்துணவும் பசுந் தீவனமும் எல்லா யானைகளுக்கும் வழங்கப்படும்.

நம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதல் மற்றும் ஆணைகளின் பேரில், யானைகளின் அனைத்துத் தேவைகளையும் கருத்தில் கொண்டு, இந்த திட்டம் முழுவதும், மிகுந்த அக்கறையுடனும், நுட்பமாகவும் முன் யோசனையுடனும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறப்பு முகாம்கள் நடத்த வேண்டும் என்று அவர் ஆணையிட்டதன் ஒரே நோக்கம், சிறைப்பட்ட நிலையில் நீண்ட காலம் உள்ள யானைகளுக்கு ஓய்வு அளிக்க வேண்டும். அவற்றிற்கு மறு வலிமை ஊட்ட வேண்டும். உடல் நலம் பேணி புத்துணர்வுச் சிகிச்சை வழங்க வேண்டும் என்பதே ஆகும்.

யானைகளை முகாம்களுக்கு அனுப்பியுள்ள தனியாருக்கும், மடங்களுக்கும் கூட எந்தவித சுமையும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் யானைகள் முகாமிற்கு சென்று திரும்பும் போக்குவரத்துச் செலவு உட்பட முகாமுக்கான மொத்தச் செலவையும் அரசே ஏற்றுக் கொண்டுள்ளது.

நம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையில் அமைந்த தமிழக அரசு, கம்பீரமும், அழகும், மென்மைப் பண்பும் கொண்ட விலங்குகளாகிய யானைகளுக்கு ஓய்வும், மறுவலிமையும், புத்துணர்வும் அளிக்கும் இந்த உன்னதத் திட்டத்தை நடத்துவதில் முழு வெற்றி பெற்றே தீரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★★★

# மதுரவாசகம் அளித்த மாணிக்கவாசகர்

- திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.
அரசுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும்
இந்து சமய அறநிலையத் துறை

மாணிக்கவாசக சுவாமிகள் அருளியுள்ள திருவாசகத்தைக் கேட்கும் விலங்குகளும், பறவைகளும் கூட மெய்ஞ்ஞானம் பெற்றுவிடும் என்று அருட்பிரகாச வள்ளலார் ''ஆளுடைய அடிகள் அருள் மாலை''யில் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

''வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழுது அங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னில் இங்கு நான் அடைதல் வியப்பன்றே''

''வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே''

எனவரும் பாடல்கள் ''திருவாசக''த்தின் சிறப்பை நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

சிவப்பிரகாச சுவாமிகள் ''நால்வர் நான்மணி மாலை'' நூலில் திருவாசகத்தின் பெருமையைத் தெள்ளிதின் உணர்த்துகின்றார்.

சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளிய வேத நூல்களை விடவும், மணிவாசகர் பாடிய திருவாசகமே கற்பார் கல்மனத்தைக் கரைய வைக்கும் சிறப்பினைக் கொண்டது என்று சிவப்பிரகாச சுவாமிகள் பின்வருமாறு கூறுகின்றார்.

''விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்
காரணன் உரை எனும் ஆரண மொழியோ?
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ?
யாதோ சிறந்தது? என்குவீர் ஆயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சு நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவாசகம் இங்கு ஒரு கால் ஓதின்
கருங்கல் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகின் மற்றையர் இலரே''

இவ்வாறு வேத முதல்வன் சிவபெருமான் அருளிய நான்மறைகளை விடவும் திருவாசகமே சிறந்தது என்று உறுதிபடப் போற்றியுள்ள சிவப்பிரகாச சுவாமிகள், மேலும் திருவாசகமே பொற்குடம் எனவும், திருவாசகத்தோடு ஒப்பிட வேதங்கள் மட்குடம் தான் எனவும் கூறியுள்ள கருத்தும் திருவாசகத்தின் பெருமையை நமக்கு நன்கு உணர்த்துகின்றது.

..... மாணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரும் ஓதும் இயற்கைத்து ஆதலின்
பொற்கலம் நிகர்க்கும்; பூசுரர் நான்மறை
மட்கலம் நிகர்க்கும் மதுர வாசகம்
ஓதின் முத்தி உறுபயன்;
வேதம் ஓதின் மெய்ப்பயன் அறமே''

(நால்வர் நான்மணிமாலை 32)

எனவும் பாடி வேதம் ஓதுவதால் பெறுவது வாழ்க்கை அறப்பயன்களே., திருவாசகம் ஓதுவதால் வீட்டின்பமே பெற்று உய்யலாம் என்பதையும் சிவப்பிரகாச சுவாமிகள் தெளிவுபடுத்துகின்றார்.

இத்தகைய மாணிக்கவாசக சுவாமிகளை இறைவர் குருவாக வந்து ஆட்கொண்ட அருள் வரலாறு வியப்புமிக்கது.

பாண்டி நாட்டில் வைகைக் கரையில் திருவாதவூர் என்று அழைக்கப்படும் திருத்தலமே நம் மாணிக்கவாசக சுவாமிகள் திரு அவதாரம் புரிந்த திருத்தலம் ஆகும். சம்புபாதாச்சாரியார் - சிவஞானவதி ஆகிய பெற்றோர்கள் செய்த அருந்தவம் காரணம் ஆகவும், நம் சைவ சமயம் செய்த புண்ணியத் தவப் பயன் காரணம் ஆகவும், உலகின் இருள் நீங்க சூரியன் உதிப்பதைப்பே..ல, மக்கள் மனத்தில் படிந்திருக்கும்

அறியாமை இருள் நீங்க, ஞானபாநுவாக வந்து பிறந்தார் மாணிக்க வாசகர்.

நந்திதேவரே இப்புவியில் வந்து மாணிக்க வாசகராய் திரு அவதாரம் புரிந்தார் எனத் திருவாலவாயுடையார் புராணம் கூறுகின்றது.

இவருடைய இயற்பெயர் இன்னதென அறிய இயலவில்லை. இவர் பிறந்த ஊரின் பெயராலேயே ''திருவாதவூரர்'' என இவர் அழைக்கப்பட்டதாக அறிகிறோம்.

பதினாறு வயதிற்குள் கலைகள் யாவும் கற்று உணர்ந்த கல்விக் கடலாகத் திகழ்ந்த திருவாதவூரரை அரிமர்த்தன பாண்டிய மன்னன் அழைத்து, முதல் அமைச்சர் பதவியையும் ''தென்னவன் பிரமராயன்'' என்ற பட்டத்தையும் கொடுத்தான்.

இவ்வாறு இருக்கும் நாளில் ஒருநாள் பாண்டிய மன்னனிடம் சில தூதர்கள் வந்து ''கீழைக் கடற்கரையில் குற்றமில்லாத நற்குதிரைகள் விற்பனைக்கு வந்து உள்ளது'' எனக் கூறினார். மன்னனும் அதனைக் கேட்டு மகிழ்ந்து திருவாதவூரரைக் குதிரைகள் வாங்கி வரும்படி மிகுந்த பொன் கொடுத்து அனுப்பி வைத்தான்.

குதிரைகள் வாங்க கிழக்குக் கடற்கரை நோக்கி பரிசனங்களுடன் வந்து கொண்டிருந்த திருவாதவூரரை ஆட்கொள்ள வேண்டி சிவபெருமான் ஒரு வயது முதிர்ந்த அந்தணர் வடிவம் பூண்டு, ஒரு அழகான சோலையில், குருந்த மரத்தின் அடியில் குரு மூர்த்தியாக வீற்றிருந்தார். அவரைச் சுற்றிலும் சிவகணங்கள் சீடர்களாக வீற்றிருந்து வேதம் ஓதிக் கொண்டிருந்தனர்.

குருவாக ஆட்கொள்ள வந்த சிவபெருமானின் திருவருள் சக்தியானது காந்தம் இரும்பை இழுப்பது போல் திருவாதவூரரை இழுத்துச் செல்ல சிவகுருவின் திருவடிகளில் அடியற்ற மரம் போல் விழுந்தார் திருவாதவூரர். பரம்பொருளாகிய தட்சிணாமூர்த்தியிடம் அருளுபதேசம் பெற்று, தான் வந்த பணி மறந்து, தன் அமைச்சர் கோலத்தைக் களைந்து, உருத்திராக்கம் பூண்டு, சிவக்கோலமாம் தவக் கோலம் பூண்டார் திருவாதவூரர் அடிகள்.

''நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க''

எனத் தமை ஆட்கொண்ட தட்சிணாமூர்த்தியைப் பாடத் தொடங்கினார் திருவாதவூரடிகள்.

இறைவரும் மகிழ்ந்து திருவாதவூரருக்கு ''மாணிக்கவாசகர்'' எனத் திருநாமம் மொழிந்து ''பாடுக மேலும் பாடுக'' எனத் திருவருள் புரிந்தார்.

திருவால வாயுடையார் புராணம் திருவாதவூரருக்கு இறைவர் ''மாணிக்கவாசகர்'' எனத் திருநாமம் சூட்டிய அருள் நிகழ்ச்சியை

''பழுதிலாத சொல்மணியினைப் பக்தி செய்து அன்பு
முழுதுமாகிய வடத்தினால் முறை தொடுத்து அலங்கல்
அழுது சாததும் மெய்அன்பருக்கு அகம்மகிழ்ந்து ஐயர் வழு
விலாத பேர் மாணிக்க வாசகர் என்றார்''

என எடுத்துக் கூறுகின்றது.

''சிவன் அவன்என் சிந்தையுள் நிறை அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்''

எனத் தாம் பெற்ற அருள் அனுபவ நிலையை எடுத்து மொழிகின்றார் மாணிக்கவாசகர்.

''நிலம்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே!
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே!
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே!
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே''

என்று திருப்பெருந்துறையில் சிவபெருமான் அருளிய பெருங்கருணைப் பெற்றியைக் கரைந்து கரைந்து இருகண்ணீர் மழை வார, சிவ போகமாம் கொழுந்தேறல் வாய் மடுத்துச் சிவபுராணமாய்ப் பாடிப் போற்றுகின்றார் நம் மாணிக்க வாசக சுவாமிகள்.

இவ்வாறு இறைவரால் ஆட்கொள்ளப் பெற்ற மாணிக்கவாசகர், அரிமர்த்தன பாண்டியன் குதிரை வாங்கிவரத் தந்து அனுப்பிய பொன்னை எல்லாம் குருந்தமரத்தடியிலே தம்மை ஆட்கொண்ட குருவருள் ஆணைப்படி சிவப் பணிக்கென்று அர்ப்பணித்து விட்டார்.

இந்நிலையில் மன்னன் ''குதிரைகளுடன் வரவும்'' எனவும் கட்டளையிட ''ஆவணி மூலத்தன்று குதிரைகள் வரும்'' என்று இறைவர் மாணிக்க வாசகரிடம் தெரிவித்து அவரை மதுரைக்கு அனுப்பி வைக்கின்றார்.

காட்டிலுள்ள நரிகளை எல்லாம் பரிகள் ஆக்கித் தாமும் வேதப்பரி ஏறும் சேவகராக ஆவணி மூலத்தன்று வருகின்றார் சிவபெருமான்.

இரவில் அக்குதிரைகள் எல்லாம் மீண்டும் நரிகளாக மாறிப் பழைய குதிரைகளை எல்லாம் கொன்று ஊரில் உள்ளோர் உறக்கத்தையும் கெடுத்துக் காட்டிற்குப் போய் விடுகின்றன.

நிகழ்ந்த மாயங்களுக்கெல்லாம் மாணிக்க வாசகரே காரணம் என எண்ணும் பாண்டிய மன்னன், வெயிலில் வைகை ஆற்று மணலில் அவரை நிறுத்திக் கொடுமைப்படுத்த, இறைவன் மாணிக்க வாசகரைக் காப்பாற்ற, வைகை ஆற்றில் வெள்ளம் பெருகச் செய்கின்றான்.

வைகையின் வெள்ளப் பெருக்குக் கரையை உடைத்துக் கொண்டு மதுரை ஊருக்குள் பாய்கின்றது. வீட்டிற்கு ஒருவர் வந்து வைகைக் கரையை அடைக்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கின்றான் மன்னன்.

'பிட்டு' விற்றுப் பிழைக்கும் வந்தி எனும் நரை மூதாட்டி, தன் பங்கை அடைக்க ஆளில்லையே என்று வருந்த, இறைவனே பிட்டுக்கு மண் சுமக்கும் பணி ஏற்று, பாண்டியனிடம் பிரம்படியும் படுகின்றான்.

கூலியாளாய் வந்த இறைவன் மேல் பட்ட பாண்டியனின் பிரம்படி அயன் மேலும், அரி மேலும், இந்திரன் மேலும், தேவர்கள் மேலும், பார் மேலும், கடல் மேலும், பாண்டியன் மேலும், அவன் தேவி மேலும், அவன் நாட்டிலுள்ளோர் அனைவர் மேலும் பட, மாணிக்கவாசகர் பொருட்டு ஆலவாய் அண்ணல் கூலியாளாய் வந்து திருவிளையாடல் புரிந்ததை அறிந்து வியப்புறுகின்றான் அரிமர்த்தன பாண்டியன்.

தன் பிழை பொறுத்தருளுமாறு, மாணிக்க வாசகர் மணிக்கழல்கள் பணிந்து மன்றாடி உய்கின்றான் அரிமர்த்தனப் பாண்டியன்.

இறைவர் தம் பொருட்டு நிகழ்த்திய அருள் விளையாடல்களை எல்லாம் திருவாசகத்தில் பற்பல பாடல்களில் பாடி உருகுகின்றார் மாணிக்கவாசகர்.

''நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞாலமெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரை எல்லாம்
பிச்சதேற்றும் பெருந்துறையாய்
அரிய பொருளே அவிநாசியப்பா
பாண்டி வெள்ளமே
தெரியஅரிய பரஞ்ஜோதி
செய்வதொன்றும் அறியேனே''

என்று ''ஆனந்த மாலை''யில் பாடி அகங்குழைகின்றார் மாணிக்கவாசகர்.

''மண்சுமந்து கூலிகொண்டு
அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி
பாடுதுங்காண் அம்மானாய்''

என்று திருஅம்மானையில் பாடி உள்ளம் நெக்குருகுகின்றார் நம் மாணிக்கவாசகர்.

இவ்வாறு மாணிக்கவாசகரை ஆட்கொள்வதற்காக இறைவர் நிகழ்த்திய திருவிளையாடல்களை வியந்து போற்றும் சிவப்பிரகாச சுவாமிகள், திருமாலுக்கு அருள்புரிவதற்காக அவருடைய கண்ணைக் கேட்டும், நாயன்மார்களுக்கு அருள்புரிவதற்காக அவர்கள்தம் மனைவி, மக்கள், உடைமை முதலான பலவற்றைக் கேட்டும் திருவிளையாடல் புரிந்துள்ள இறைவன், மாணிக்கவாசகர் தம்மேல் திருவாசகம் பாட வேண்டும் என்பதற்காகத் தாம் குதிரை வணிகனாக அல்லற்பட்டும், தம் முடிமேல் மண் சுமந்து அல்லற்பட்டும், தம் திருமேனி மேல் பிரம்படி கொண்டு அல்லற்பட்டும் அருள் புரிந்தது வியப்பல்லவா? என்று வியந்து போற்றிப் புகழ்ந்துள்ள பாடல் மாணிக்கவாசகர் மாண்பினை நமக்குத் தெற்றெனப் புலப்படுத்துகின்றது.

அவ்வரிய பாடல் பின்வருமாறு :

''கடல்நிற வண்ணன் கண்ஒன்று இடந்து
மறைச்சிலம் பரற்று மலரடிக்கு அணியப்
பரிதி கொடுத்த சுருதி நாயகற்கு
முடிவிளக்கு எரித்தும் கடிமலர்க் கோதைச்
சுரிகுழல் கருங்கண் துணைவியை அளித்தும்
அருமகள் நறும்பூங் கருமயிர் உதவியும்
நெல்முளை வாரி இன்னமுது அருந்தியும்
கோவண நேர்தனை நிறுத்துக் கொடுத்தும்
அகப்படும் அணிமீன் அரற்கென விடுத்தும்
பூட்டி அரிவாள் ஊட்டி அரிந்தும்
தலையுடை ஒலிக்கும் சிலையிடை மோதியும்
மொய்ம்மலர்க் கோதை கைம்மலர் துணித்தும்
தந்தையைத் தடிந்தும், மைந்தனைக் கொன்றுங்
குற்றம் செய்த சுற்றங் களைந்தும்
பூக்கொளும் மாதர் மூக்கினை அரிந்தும்
இளமுலை மாதர் வளமை துறந்தும்
பண்டை நாள் ஒரு சிலர் தொண்டர் ஆயினர் ......
வாதவூர் அன்ப

பாடும் பணிநீ கூடும் பொருட்டு
மதுரைமா நகரில் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும்
நீற்றெழில் மேனியில் மாற்றடி பட்டும்
நின்னைத் தொண்டன் என்னக் கொண்டனன்''

(நால்வர் நான்மணி மாலை 12)

அடியார்கள் பலர் ஆண்டவன் அருள் பெற எத்தனை எத்தனைக் கஷ்டங்கள் பட வேண்டி இருந்தது? ஆனால் அந்த ஆண்டவனே எத்தனை எத்தனைக் கஷ்டங்கள் பட்டு மாணிக்க வாசகரின் பாடலைப் பெற்றுள்ளான்? என்று வியந்து போற்றுகின்றார் சிவப்பிரகாச சுவாமிகள்.

திருவாசகத்தில் ''சிவபுராணம்'' முதலாக ''அச்சோப் பதிகம்'' ஈறாக 51 தலைப்புகளில் பாடப் பட்டுள்ள 656 பாடல்கள் உள்ளன.

இப்பாடல்களில் உள்ள உருக்கம் போல் வேறு எப்பாடல்களிலும் காண முடியாது. ஆகவேதான் ''திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்'' என்ற பழமொழி உண்டானது.

''பால் நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியேன் உடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே!
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்து அருளுவது இனியே''

என்று தாயினும் இனியவன் இறைவன் என்று உருக்க மொடு பாடுகின்றார் மாணிக்கவாசகர்.

''தாயிற் சிறந்த தயாவான தத்துவனே''
''தாயாய் முலையைத் தருவோனே''
''நாயிற் கடைப்பட்ட நம்மையுமோர் பொருட்படுத்துத்
தாயிற் பெரிதும் தயாவுடைய தம்பெருமான்''
''தாயுற்று வந்தென்னை ஆண்டு கொண்ட தன்கருணை''
''தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ''

எனப் பற்பல பாடல்களில் கண்ணுக்குத் தெரிந்த தாயுடன் கருணைக் கடவுளான சிவபெருமானை ஒப்பிட்டுப் பாடுகின்றார் மாணிக்கவாசகர்.

திருவாசகத்தில் உள்ள ஒவ்வொரு பாடலும் நம் ஊனினை உருக்கி உள்ளொளிப் பெருக்கக் கூடியவை.

திருவாசகத்தில் இடம் பெற்றுள்ள ''திருவெம்பாவை''ப் பாடல்கள் மார்கழி மாதத்தில் அனைத்து சிவாலயங்களிலும் ஒலிக்கக் கூடியவை. ''திருவெம்பாவை''ப் பாடல்கள் பாடப் பாவையருக்குக் கடி மணம் கூடிவரும்.

''உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்குஅப் பழஞ்சொற் புதுக்கும்எம் அச்சத்தால
எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம் கேள்
எங்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல்பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கு இப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழில் என்ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்''

என்ற திருவெம்பாவைப் பாடல் கடிமணம், கருத்தொருமித்த மணமாகவும் திகழ வழிகாட்டுவதாகத் திகழ்கின்றது.

திருவாசகத்தில் வரும் ''திருச்சாழல்'' பாடல்கள் ஊமையாயிருந்த ஈழமன்னன் மகளைப் பேச வைத்த அற்புதம் கொண்ட பாடல்கள் ஆகும்.

''பாவை பாடிய வாயால்
கோவை பாடுக''

எனச் சிற்றம்பலப் பெருமான் மாணிக்கவாசகரைக் கொண்டு, ''காமம் சான்ற ஞானப்பனுவல்'' எனப் படும் ''திருக்கோவையார்'' எனும் சிற்றிலக்கியத்தையும் பாட வைத்தாக அவர்தம் வரலாற்றால் அறிந்தின்புறுகின்றோம்.

மாணிக்கவாசகர் சொல்லச் சொல்ல தில்லை சிற்சபேசர் திருவாசகம் பாடல்களையும், திருக்கோவையார் பாடல்களையும் எழுதிக் கொண்டார் என்று அறிகின்றோம்.

''மாணிக்கவாசகர் சொல்ல அழகிய திருச்சிற்றம்பலம் உடையார் எழுதியது'' என்று கைஎழுத்தும் இட்டு உலகிற்கு மாணிக்க வாசகர் மாண்பினை அம்மன்றாடும் பெருமானே எடுத்துக் காட்டியுள்ளார் என்றால் மணிவாசகரின் திருவாசகத்திற்கு ஈடேது?

''தொல்லை இரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகமென்னும் தேன்''

''வாழிமணி வாசகர்தம் வாசமலர் பாதம்
வாழிமணி வாய்மலர்ந்த வண்டமிழின் வேதம்
வாழி மணி கண்டன் அருள் வான் சைவ போதம்
வாழி மணி நீறடியர் வாழ்த்து சிவநாதம்.''

★★★

# திருமந்திர உபதேசம்

"திருமந்திரச் செம்மல்"

- திருமிகு டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. (ஓய்வு)

(6)

இப்பூவுலகில் உயிர், உடலெடுத்துப் பிறவியைப் பெற்றவுடன் தனக்கென்று வாழ்வதற்காக ஒரு நீதியை மேற்கொள்கின்றது. அப்பொழுது அது தன்னை உடலின் வேறுபட்ட தனிப் பொருளாகக் கருதிக் கொள்வதில்லை.

உடலோடும், அதைச் சார்ந்த கருவிகரணங்களோடும் பிரிப்பின்றி இணைந்திருக்கும் காரணத்தால் உயிர் தன்னை உடலாகவே கருதிக் கொள்கின்றது.

அந்த நிலையில் அது உடல் வழிச்செல்கின்றது.

உடல் என்பது உயிரில்லாத சடப்பொருள் ஆகும். எனவே உடலுக்கென்று ஒரு தனி வழி கிடையாது.

உடலும், கருவிகளும் தங்களை நெறிப்படுத்திக் கொள்ளும் புலன்களின் உதவியை நாடுகின்றன.

புலன்களும் சடப் பொருள்களே. ஆயினும் உயிரோடு இவை எல்லாம் சேர்ந்திருக்கும் சூழ்நிலையில் புலன்கள் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய உட்கருவிகளோடு இணைந்தே உலகத்தில் புறத்தே உள்ள அனுபவங்களைச் சேர்க்கின்றன.

உயிர் தனது எழுச்சியின் மூலமாகப் புலன்கள் வழியாகப் பெறும் செய்திகளைத் தான் பெற்ற அனுபவமாகவே கருதுகின்றது.

அவ்வனுபவங்களால் உந்தப்பட்டு அவற்றின் மீது விருப்பு, வெறுப்பு ஆகிய உணர்ச்சிகளைச் செலுத்திச் சடப்பொருள்கள், உயிருடைய பொருள்கள் போன்ற ஒரு மயக்கத்தைத் தனக்குத் தானே உருவாக்கிக் கொள்கின்றன.

உயிர், புலன் வழி சென்று உலக அனுபவத்தைப் பெற்று அதிலே தன் திறனை வளர்த்துக் கொள்வதையும், தேர்ச்சி பெறுவதையும் ஒரு சிறப்பான நெறியாகவே கருதுகின்றது.

இவ்வாறு புலன் வழிச் சென்று தான் மேற்கொள்ளும் சாதனைகளே உயிருக்குப் பிரதானமாகத் தோன்றுகின்றது.

உயிர், வெற்றிகளையும் தோல்விகளையும் இன்பங்களையும் துன்பங்களையும் உலகப் பொருள்கள் வழியாகப் பெற்றாலும் அவற்றைத் தனதாகக் கருதித் தன் முனைப்பை வளர்த்துக் கொள்கின்றது.

இதுவே உயிருக்கு ஒரு வாழ்க்கை நெறியாக அமைந்து விடுகின்றது.

கல்வி, செல்வம், பதவி, பொறுப்புப் போன்றவைகளை எல்லாம் தன்முனைப்பை வளர்ப்பதற்கென்றே அமைந்துள்ள கருவிகளாக உயிர் தன் இயக்கத்தை அமைத்துக் கொள்கின்றது.

இவ்வாறு அமையும் இயக்கத்தை உயிரானது உடலிலிருந்து வேறாகத் தன்னைக் கருதிக் கொண்டு, தனித்து நின்று தான் செய்வதாக எண்ணுவது கிடையாது.

உயிரின் தன்மை, தான் சார்ந்த ஒரு பொருளைத் தன்னோடு இணைத்துக் கொண்டு அதுவாகவே தன்னைக் கருதிக் கொள்ளுதல் ஆகும்.

இவ்வாறு உடலோடும், உலகத்தோடும் இவற்றோடு பெறும் அனுபவங்களும் உயிரின் வினைச் சூழலுக்கு ஆதாரம் ஆகின்றன.

மனத்தாலும், வாக்காலும், செயல்களாலும் உயிரானது வினைக் கூட்ட வளர்ச்சிக்கு வித்திடுகின்றது.

தான் செய்த வினைகளின் பயன்களைத் துய்ப்பதற்காகவே மீண்டும் மீண்டும் உயிர் பிறவிகளை எடுக்க நேரிடுகின்றது.

***

இவற்றை எல்லாம் உயிர் தெரிந்து கொள்வது இல்லை. ஏதோ ஒரு அறியாமை உயிரின் கண்களை மறைக்கின்றது.

இவ்வாறு பல பிறவிகளை உயிர் எடுத்துத் தான் பெறும் இன்பம், துன்பம், ஏற்றம், தாழ்வு ஆகிய வற்றின் வாயிலாக சில விளக்கங்களைப் பெற்றுக் கொள்கின்றது.

இந்த விளக்கங்களின் உண்மை, உயிரின் அறிவைப் படிப் படியாக விளக்கம் பெறச் செய் கின்றது.

இதனைச் சான்றோர்கள் ''படிநிலை வளர்ச்சி'' என்று குறிப்பிடுவார்கள்.

பல பிறவிகள் எடுத்த நிலையில் உயிருக்கு ஒரு சலிப்புத் தோன்றுகின்றது.

''பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்
எம்பெருமான்''

என்பார் மாணிக்கவாசகர்.

''தளர்ந்தேன் வந்து தாங்கிக் கொள்ளே'' என்றும் இறைவனை வேண்டிக் கொள்வார் அவர்.

அப்பர் பெருமான் இறைவனை அழைத்து ''தன் கடன் அடியேனையும் தாங்குதல்'' என்று வேண்டிக் கொள்கின்றார்.

இந்தச் சலிப்பும், தளர்ச்சியும் உடலுக்கானவை என்று எண்ணக் கூடாது. உயிரே இத்தகைய தளர்ச் சியை அனுபவிக்கின்றது.

உயிர் இத்தகைய தளர்ச்சியை அடையும் பொழுதுதான் இதுகாறும் தான் உடலோடு இணைந்து சென்ற பாதை தவறானது என்ற உண்மையை உணரத் தொடங்குகின்றது.

இந்நிலையில் உயிருக்குத் தன்னைப் பற்றியும் உலகைப் பற்றியும் ஒரு ஆழ்ந்த ஐயப்பாடு தோன்று கின்றது.

உயிர், தானிருக்கும் நிலையை ஒருவித மயக்க நிலையாகத் தெரிந்து கொள்கின்றது.

இதனை மாற்றிக் கொள்ளும் ஆற்றல் தன்னிடம் இல்லை என்பதையும் உயிர் உணருகின்றது.

தனக்கு அப்படிப்பட்ட ஒரு மாபெரும் ஆற்றல் ஒன்றே தன்னைக் காத்து இந்தச் சூழலிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள துணை புரியும் என்று உயிர் தெரிந்து கொண்டு விடுகின்றது.

அப்பொழுது புதியதொரு பாதையை உயிர் தெரிந்து கொண்டு விடுகின்றது.

இவ்வாறு உயிர் பெறும் அனுபவத்தைச் சான் றோர்கள் ''பாழ்'' என்று குறிப்பிடுகின்றார்கள்.

இதுகாறும் தன்னை மயக்கி உலகத்தோடு இணைத்து வைத்த உடல், கருவிகள் ஆகியவற்றின் மீது தான் வைத்த பாசத்தை உயிர் களைந்து திருவருளின் வருகையை எதிர்நோக்கி இருக்கும் ஒரு உணர்வே இந்தப் ''பாழ்'' என்கிற நிலையாகும்.

ஆழ் மனதில் இறைவனைத் தன்னுள் கண்டு அனுபவித்து, இறைவனுடைய இணையடி நிழலில் தான் அமர்ந்து கொள்ள வேண்டும் என்ற வேட்கை உயிருக்கு உண்டாகின்றது.

அது முதலாக உயிர், தாமோதிய கல்வியை விட்டும் பரம்பொருள் கல்வியை நாடுகின்றது.

பரம்பொருள் கல்வியைத் தனக்கு அளிக்கவல்ல ஞானாசிரியரின் திருவருளைப் பெற்றுத் துய்க்க, உயிர் விழைகின்றது.

பொருட் பிரபஞ்சம் உயிரை விட்டு அகல அகல, சொற் பிரபஞ்சம் உயிரை நெருங்குகின்றது.

இந்நிலையில் ஆதிமந்திரம் ஆகிய ஐந்தெழுத்து மந்திரம் உயிரின் உணர்வுக்குள்ளே தன்னைப் பதித்துக் கொள்கின்றது.

எல்லையில்லாத வாழ்க்கைக் கடல், அதன்மீது வீசும் பேய்க் காற்று, அக்காற்றினால் உந்தப்பட்டு எழும் பயங்கரமான வினை அலைகள். அந்த வினை களோடு சேர்ந்து தாக்கும் காமம், வெகுளி, மயக்கம் ஆகிய சுறாமீன்கள் - இவற்றிலிருந்து தப்புவதற்கு வழி தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கும் உயிருக்கு அதனுடைய அறிவு முயற்சி, திருவருளின் அணைப்பு

ஆகியவற்றால் தெளிவுற்ற ஆழ் மனதில் இறைவனுடைய ஐந்தெழுத்துத் திருநாமமே காக்கும் தாரக மந்திரமாகத் தோன்றுகின்றது.

ஐந்தெழுத்து மந்திரத்தைத்துணை கொண்டு தான் உய்ந்த திறத்தினை மாணிக்கவாசகப் பெருமான்

''தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்து எவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொன்றிக்
கனியை நேர் துவர்வாயார் என்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின்
வாய்ப்பட்டு
இனி என்னை உய்யுமாறு என்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக்
கிடக்கின் றேனை
முனைவனே முதல் அந்தம் இல்லா அல்லற்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க
னேற்கே''

என்று அருளிச் செய்திருக்கக் காண்கின்றோம்.

இவ்வாறு தன்னைத் தாங்கிக் கொள்ளும் இறைவனிடம் மிக்க நன்றி பாராட்டும் உணர்வோடுதான் மாணிக்கவாசகர், தன்னைக் காத்த இறைவன் திருநாம மந்திரத்தின் சிறப்பைக் கூறி

''நமசிவாயம் வாழ்க நாதன்தாள் வாழ்க'' என்று சிவபுராணம் ஆகிய அற்புதமான பாடலையே தொடங்குகின்றார்.

நமசிவாயத்தின் பெருமையை ஞானசம்பந்தரும்

''காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சி வாயவே'

என்று அருளிச்செய்கின்றார்.

அப்பர் பெருமான் பல்லவ மன்னனால் பல வகைகளிலே துன்புறுத்தப்பட்டார். பல்லவ மன்னன் அப்பருக்குப் பல இன்னல்கள் இழைத்துக் கடைசியாக அவரைக் கல்லில் கட்டிக் கடலில் பாய்ச்சுமாறு ஆணை இடுகின்றான்.

கல்லில் கட்டி அப்பர் பெருமானைக் கடலில் பாய்ச்சிய போதும் அவருடைய உள்ளத்திலே ஒலித்துக் கொண்டிருந்த ''நமசிவாய'' - ஐந்தெழுத்து மந்திரம் அவரைக் காப்பாற்றுகின்றது.

''சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.''

என அப்பர் பெருமான் பாட அம்மந்திரப் பாடல் அவரைக் காப்பாற்றுகின்றது. கல்லும் மிதக்கத் தொடங்குகின்றது.

ஐந்தெழுத்து மந்திரத்தால் தம் உள்ளத்தை நிரப்பி வைத்திருக்கும் சான்றோர்களுக்கு அவர்களை நெருங்கும் பெரும் தீங்குகள் விலகுவது மட்டுமன்றி, அவர் தம் மலங்கள் அனைத்தும் கூட ஐந்தெழுத்து மந்திரத்தின் ஆற்றலால் நாசமுறும் என்பதையும் சேக்கிழார் பெருமான் தமது உணர்வாகத் தெரிவிக்கும் அற்புதப் பாடல் இதுவாகும்.

''இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்கள் ஏறிட
அருளுமெய் அஞ்செழுத்து அரசை இக்கடல்
ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ?''
(திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம் - 129)

சுந்தரமூர்த்தி நாயனார் ''திருப்பாண்டிக் கொடுமுடி'' எனும் திருத்தலத்திற்குச் செல்கின்றார். அங்குள்ள இறைவரிடம் தம் மனதைப் பறிகொடுத்த நிலையில் சிவப் பரம்பொருளைத் தவிரத் தம் உள்ளத்தில் வேறொரு பற்றும் இல்லை என்று தெரிவிக்கின்றார். எம்பெருமானைச் சரண் அடைந்து அவர் பாதமே பற்றிக் கொண்டு தம் உள்ளமெல்லாம் எந்நேரமும் பரம்பொருளின் திருநாமத்தைச் சொல்லிய வண்ணம் இருப்பதை

''மற்றுப் பற்றெனக் கின்றிநின்திருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப்பிற
வாத தன்மை வந்து எய்தினேன்
கற்றவர் தொழு தேத்தும் சீர்க் கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவா உனை நான் மறக்கினும்
சொல்லுநா நமச்சிவாயவே''

என்று உருக்கமுறத் தெரிவிக்கின்றார்.

சுந்தரர் பெருமானுடைய உடலும், உடலைச் சார்ந்த கருவிகளும் அவருடைய உயிரின் தூய்மையால் தாங்களும் தூய்மை பெறுகின்றன. தூய்மை பெற்ற நிலையில் இறைவனின் திருநாமம் அவர் உள்ளம் முழுவதிலும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

வேறு பற்றுக்கள் இன்றி, தான் எனும் முனைப்பு அடங்கித் தனது உடலையும் உயிர் அறிந்து கொள்ளாத நேரத்திலும் இறைவனின் திருநாமம் வாய் வழியாக ஒலித்துக் கொண்டிருக்கும். இவ்வாறு இறைவனின் திருநாமம் ஒலித்துக் கொண்டிருக்குமானால் அத் தகைய உடலுக்கு மூச்சு அடங்கும் நிலையில் கூட மீண்டும் உயிர் கொடுக்க அருளாளர்களால் முடியும்.

இறைவனுடைய திருநாமம் உயிரோடு ஒன்றி யிருக்கும் நிலையை அருளாளர்கள் இறைவனுக்கு எடுத்துக் காட்டி அத்தகைய உயிருக்கு மூச்சு அடங்கும் நிலையில் கூட உயிர்ப்புச் சக்தியை மீளவும் அளிக்கச் செய்வார்கள் என்பதைத் திருமுறைகள் நமக்குத் தெளிவு படுத்துகின்றன.

திருஞானசம்பந்தர் பெருமான் திருப்பாச்சிலாச் சிரமம் எனும் திருத்தலத்தில் கொல்லிமழவமன்ன னுடைய மகள் முயலகன் நோயால் பாதிக்கப்பட்டுச் செயல்கள் எல்லாம் அடங்கிய நிலையிலும், அப் பெண் ஆனவள் இறைவன் திருநாமத்தைத் தன் வாயால் முணுமுணுத்துக் கொண்டிருப்பதைக் கண் டறிகிறார். மழவன்மகளின் பரிபக்குவ நிலையைச் சிவபெருமானுக்கு எடுத்துக் காட்டி செயல் ஒடுங்கிய நிலையில், திருமந்திரம் விடாது செபித்துக் கொண் டிருக்கும் அதற்காகவே அப்பெண்ணை நலப்படுத்தி அருள் புரிதல் வேண்டும் என்று திருஞானசம்பந்தர் விண்ணப்பித்துக் கொண்டதை பின்வரும் திருமுறைப் பாடல் நமக்கு நன்கு தெளிவுபடுத்துகின்றது.

''ஏவலத்தால் விசயற் கருள் செய்து
இராவணனை ஈடழித்து
மூவரிலும் முதலாய் நடுவாய
மூர்த்தியை அன்றி மொழியாள்
யாவர்களும் பரவும் எழிற் பாச்சி
லாச்சிராமத் துறை கின்ற
தேவர்கள் தேவரே சேயிழை வாடச்
சிதை செய்வதோ இவர் சேர்வே.''

எனும் பாடலில் ''மூர்த்தியை அன்றி மொழியாள்'' என அம்மங்கை நமசிவாய மந்திரத்தை முணுமுணுத்துக் கொண்டிருக்கும் பாங்கினைத் தாமும் உணர்ந்து, இறைவருக்கும் பரிந்துரைத்து நோய் தீர்த்து உயிர் காக்கத் திருஞான சம்பந்தர் வேண்டுவதை நாம் காணலாம்.

உயிர் உறையும் உடல் நலிவடைந்த போதும், தன் தீனக் குரலில் இறைநாமத்தை விடாது செபிக்கு மானால் தீனதயாளன் ஆகிய இறைவர் அருள் புரிந்து உயிரையும் உடலையும் நலப்படுத்தி அருள்புரிவார் என்பதற்கு இவ்வரலாறு ஒரு அற்புதச் சான்றாகும்.

மனதில் விடாது செபிப்பது மந்திரம் ஆகும். அவ்வாறு நினைப்பவர்களைக் காப்பது மந்திரம் என்பது அருளாளர்களுடைய திருவாக்கு ஆகும்.

மந்திரம் திருவருளின் வெளிப்பாடு.

இறைவர் தம்முடைய அருளாற்றலை உயிர் களோடு சேர்க்க விரும்பும்பொழுது, தம் திருநாமத்தை அருளாளர்களின் உணர்வின் வழியாக வெளிப்படுத்து கின்றார்.

அருளாளர்கள் நிறைமொழி மாந்தர்கள், முற் றுணர்வு பெற்றவர்கள். இறை அனுபவத்திலே திளைத்து நிற்பவர்கள்.

அருளாளர்களுடைய திருவாக்கெல்லாம் இறை வனுடைய திருவாக்கே.

உயிர்கள் இறைவனை வழிபட விரும்பும் பொழுது, இறைவன் தன்னை உருவத் திருமேனி யாகக் காட்டிக் கொள்கின்றான்.

இறைவனுடைய திருநாமம் அவர் தம் திரு மேனியோடு இணைந்து கொள்கின்றது.

நுட்பமான நிலையில் இறைவனுடைய திரு நாமம் உயிருக்கு உயிராக நின்று துணை புரிகின்றது.

அருளாளர்கள் இதனை நன்கு உணர்ந்தவர்கள் ஆவர்.

இறைவனுடைய பண்புகளையும் குணங்களை யும் உயிர்களுக்கெல்லாம் தெரிவிப்பதற்காக அரு ளாளர்கள் இறைவனுடைய திருநாமத்தை மந்திரங் களாகக் கையாளுகிறார்கள்.


மந்திரங்களின் உண்மை, பண்பட்ட உள்ளங் களுக்குத் தெளிந்த நீர்போல் சிறந்து விளங்கும்.

உண்மை ஈடுபாட்டினோடு மந்திரங்களை ஓதும் போது அவை ஓதும் உள்ளத்தைப் பக்குவம் அடையச் செய்கின்றன.

இத்துணை ஆற்றல்கள் மந்திரங்களுக்கு இருப் பதால்தான் தொல்காப்பியர்

''நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப''

என மந்திர விளக்கத்தை எடுத்து மொழிந்துள்ளார்.



திருமூலர் பெருமான் அருளிச் செய்துள்ள ''திருமந்திரமாலை'' முழுவதும் மந்திரம் என்றே பெயர் பெற்று விளங்கினாலும்

''மூலன் உரைசெயத முந்நூறு மந்திரம்'' எனும் அடியும் ஒரு பாடலில் வருகின்றது.

திருமந்திரத்தை மந்திரம், யந்திரம், தந்திரம் என்று முப்பகுதிகளாகத் தொகுத்து, மந்திரப் பகுதியிலே சற்றேறக் குறைய முந்நூறு பாடல்கள் இருப்பதாகச் சில சான்றோர்கள் கருதுவர்.

ஆயினும் திருமூலர் உரைசெய்த ''முந்நூறு மந்திரம்'' என்பது ஒரு தனி நூல் என்று துடிசைக் கிழார் போன்ற சில சான்றோர்கள் கருதுகிறார்கள்.

சித்தாந்தப் புலவர் திரு நா. சிவப்பிரகாச தேசிகர் ''திருமூலர் அருளிய திருமந்திரமாலை முந்நூறு'' *(அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு, 1990)* எனும் நூலையும் வெளியிட்டுள்ளார்.

இவை இவ்வாறு இருந்தாலும், திருமூலர் பெருமான் தவயோகத்தில் நின்று சிவப்பரம் பொருளை உணர்ந்த உணர்வு நிலையில் அருளிச் செய்த ''திருமந்திர மாலை''யில் காணப்படும் மூவாயிரம் பாடல்களையும் மந்திரமாகவே கொள்வதுதான் சாலச்சிறந்ததாகும்.

*(தொடரும்)*

* * *

# என்னை உனக்கே தந்தேன் முருகா!

– திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.
அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சிப் பண்பாடு மற்றும் அறநிலையத்துறை



*முருகா! முத்துக்குமரா! முத்தமிழ்த் தலைவா! (முருகா)*

*என் செவிகள் உன் திருப்புகழை எப்போதும்*
*கேட்டு ஞானத்தேனில் ஊற வேண்டும்.*
*என் விழிகள் உன்னை நினைந்து நினைந்து*
*கண்ணீர் ஊற்றாய் ஆக வேண்டும். (முருகா)*

*என் வாய் உனை எக்கணமும் புகழ்ந்து பேசி*
*மெய் மறந்து இருக்க வேண்டும்.*
*எந் நெற்றி சக்தித் திருமகனின்*
*திருநீறு அணிந்து சிறக்க வேண்டும். (முருகா)*

*என் இதயம் துடிக்கும் போதெல்லாம்*
*முருகா என்று சொல்லியே துடிக்க வேண்டும்*
*என்நா சுவைத்து, உணவை நான் உண்ணும் போது*
*என் நாயகன் வேலனை நினைந்தே*
*உண்ண வேண்டும் (முருகா)*

*என் கரங்கள், கந்தனைத் தொழுத பின்னர் தான்*
*மற்ற பணியைப் புரிய வேண்டும்*
*என் கால்கள் கடம்பனிருக் குமிடம் சென்ற*
*பின்னர் தான் மற்ற இடத்திற்குச்*
*செல்ல வேண்டும்*
*என் உயிர் உமை மைந்தன் கதிர் வேலனை*
*நினைந்து உருகி உருகிப் பின்*
*பிரிய வேண்டும். (முருகா)*

★★★

# அருள்நிறை அண்ணாமலை

- முதுபெரும் புலவர் அ. பாண்டுரங்கனார்

திரு அண்ணாமலை கிருதயுகத்தில் நெருப்பு மலையாகவும், திரேதா யுகத்தில் மாணிக்க மலையாகவும், துவாபர யுகத்தில் பொன்மலையாகவும், கலியுகத்தில் கல் மலையாகவும் திருவுருவம் கொள்ளும். அந்த அண்ணாமலைக்குக் கீழ்ப்பக்கத்தில் அர்க்கமலை என்று ஒரு மலையுண்டு. அதன்கண் தேவேந்திரன் இருந்துகொண்டு இறைவனைத் துதி செய்வான். தென்பக்கத்தில் தெய்வமலை என்று ஒரு மலையுண்டு, அதில் எமன் இருந்து வணங்குவான். மேற்புறத்திலுள்ள தண்ட மலையிலிருந்து வருணன் வணங்குவான். வடபாகத்தில் உள்ள சூல மலையில் இருந்துகொண்டு குபேரன் வணங்குவான். மற்றும் நான்கு திக்குகளிலும் உள்ள மலைகளில் இருந்துகொண்டு வாயு, அக்கினி, ஈசானன், நிருதி ஆகியவர் வணங்குவர். உமையம்மை இந்த நகரத்தில்தான் இடப்பாகம் பெற்றார். அயனும் அரியும் சிவபிரானுடைய அடிமுடிகளைத் தேடி, அறிய முடியாமல் செருக்கடங்கிய இடம் இந்நகரேயாம். வச்சிராங்கத பாண்டியன், கலாதரன் காந்திசாலி ஆகியோர் அந்த மலையை வலம் செய்து இறை அருள் பெற்றனர்'' என்றார் நந்திதேவர்.

இவ்வாறு நந்திதேவர் அருணாசலத்தை எல்லா நகரங்களிலும் மேலானதாக உயர்த்திக் கூறக் கேட்ட மார்க்கண்டேய முனிவர், ''அண்ணாமலைக்கு எதனால் அத்துணைச் சிறப்பு உண்டாயிற்று'' என்று திருநந்தி தேவரிடம் வினவினார். திருநந்தி தேவர் சொல்வாரானார்: ''தில்லையைத் தரிசிப்பதாலும், காசியில் இறப்பதாலும், திருவாரூரில் பிறப்பதாலும், முக்தியுண்டாகும். நேரில் சென்று தில்லையை வணங்குவது எல்லோராலும் இயலாது. காசியில் இறப்பதும் எளிதன்று. திருவாரூரில் பிறப்பதும் நம்மால் ஆகக் கூடியதன்று. ஆனால் அண்ணாமலையை ஒன்றியிருந்து ஒருமுறை நினைத்தாலே முக்தி கிடைக்கும்.''

''அவ்வூரில் உள்ள கற்கள் எல்லாம் சிவலிங்கங்கள். அண்ணாமலையை நினையாதவர்க்கு முக்தியில்லை. ஒரு கொடியின் வேரில் தண்ணீர் ஊற்றினால், எல்லாப் பாகமும் தழைக்கும். அவ்வாறே அருணாசலத்தில் சிறப்பாகப் பூசை நடந்தால் எல்லா ஊர்களிலும் சிறப்பாக பூசை நடந்ததாகக் கொள்ளலாம். அண்ணாமலையில் பூசை நடைபெறவில்லையானால், எங்கும் பூசை நடைபெறவில்லை எனலாம்'' என்று நந்திதேவர் அண்ணாமலையாம் அருள் நகரின் பெருமை மொழிய மார்க்கண்டேயர் வணங்கி நின்று, ''திருவண்ணாமலையில் திருமாலும் பிரமனும் சிவபிரானுடைய அடிமுடியைத் தேடிய வரலாற்றினை எமக்குக் கூறியருள்க!'' என்று வேண்டிக் கொள்ள, திரு நந்தி தேவர் மேலும் உரைப்பாரானார்.

பிரமதேவர் ஒருநாள் தன்னால் படைக்கப்பட்ட பொருள்களைப் பார்த்து, ''இவ்வுலகெல்லாம் நம்மால் படைக்கப்பட்டன அன்றோ?'' என்று செருக்கடைந்தார். அதனால், திருமாலிடம் சென்று, அவரை அவமதித்துப் பேசலானார். ''திருமாலே! பதினான்கு உலகங்களையும் ஏழு மேகங்களையும், ஏழு குல பருவதங்களையும் மனத்தால் படைத்தேன்; அசையும் பொருள், அசையாப் பொருள் அனைத்தையும் உண்டாக்கினேன். ஆகவே, 'எல்லாவற்றிற்கும் நானே கருத்தா' என்பதனையும் 'என் பிள்ளைதான் பிரமன்' என்பதனையும் மறந்து விடுக! நான் உலகத்தைப் படைக்கவில்லையானால், நீ எப்படிக் காப்பாற்றுவாய்? சுவர் இல்லாமல் சித்திரம் உண்டோ?'' என்று பிரமன் திருமாலிடம் கூறிப் பின்னரும் சொல்வார்: ''திருமாலே! 'அனைத்தையும் காக்கும் தெய்வம் நாமே' என்ற செருக்கினை விடுக! இல்லையானால், உன் பதவியை நீக்கி, மற்றொருவனை உண்டாக்கி உன் பதவியில் அமர்த்துவேன். தேவ கூட்டம் உன்னை வளைத்துக் கொள்ளும் முன்பே, நீ பாற்கடலில் மறைந்து கொள்க!'' என்றான். மேலும், ''திருமாலே! நீ பிருகு முனிவர் இட்ட சாபத்தினால் பத்து முறை பூமியில் பிறந்தாய்; நீ பிறந்த போதெல்லாம், உனக்கு உரிய பெரிய உடல்களைப் படைத்துப் படைத்து என் கைகள் கறுத்தன. 'நம் உந்தியில் தானே இவன் பிறந்தான்' என்று கருதற்க! நீ முன்னொரு கால் ஒரு தூணின்கண் பிறந்தாய்; அத்தூணை உனக்குத் தகப்பன் என்று கூறட்டுமா? அத் தூண், உனக்குத் தந்தையானால், எனக்கு நீ தந்தை ஆவாய்; நெருப்பு மூங்கிலின் இடத்துப் பிறந்து, மூங்கிலை எரித்துப் போடுகிறதை அறியாயோ? அவ்வாறே உன்னிடத்தில் நான்

பிறந்திருந்தாலும் உன்னை அழித்துப் போட என்னால் இயலும்'' என்றார் நான்முகனார்.

பிரமன் கூறியவற்றைக் கேட்ட திருமாலுக்குச் சினம் மூண்டெரிந்தது. ''பிரம்மனே! நீ வந்த வழியையும் அறிந்தாயில்லை; எனது கொப்பூழ் உனது தாய் என்று நினைக்கவில்லை; இனி இப்படி இகழ்வாயாகில் பொறுத்திருக்க மாட்டேன். மது என்பவனும் கைடவன் என்பவனும், எனக்குப் பிள்ளைகளாயிருந்தும், என்னை இகழ்ந்து வெறுத்ததனால் கொன்றுவிட்டேன். உடலிலே ஒரு கட்டி உண்டானால் அதை அறுத்தெறிந்து குணப்படுத்துவர் அல்லரோ? சிவபிரான் உனது முடிகளில் ஒன்றைப் பிடுங்கி எறிந்த காலத்தில் அத் தலையை மறுபடியும் உண்டாக்கிக் கொள்ள உன்னால் இயலவில்லை. அப்படியிருக்க நீ உன்னை எப்படித் தலைவன் என்று சொல்கிறாய்? பிரமனே! சோமுகாசுரன் உன்னிடத்தில் வேதங்களைப் பறித்துச் சென்றபோது, நான் மச்சாவதாரங் கொண்டு அவனைக் கொன்று மறைகளை மீட்டுத் தந்தேன்; திறமையுள்ள பல அசுரர்களைக் கொன்றேன். உன்னை அழிப்பது எனக்கு அரிய காரியமா?'' என்றார்.

இருவர்க்கும் இடையே பேச்சு வளர்ந்து போர் மூண்டது. அண்டகோடிகள் அனைத்தும் அதிர்ந்தன; தேவர் முதலானோர் அச்சமுற்று அலமந்தனர். பிறகு அனைவரும் கூடி முழுமுதற் பரம்பொருளாகிய சிவபெருமானிடம் சென்று விண்ணப்பம் செய்தனர். சிவபெருமான் அவர்களுடைய அச்சத்தை அகற்றவும் போரை நிறுத்தவும் திருவுளங் கொண்டு,

*''நடுக்கமுறு முனிவரெலாம் அமரர்எலாம்*
*பயம்தவிர நாகம் மீது*
*படுக்கைபுரி திருமாலும் பங்கயத்தில்*
*உறும் அயனும் பகைமை தீர*
*அடுக்கியிடும் புவனமெலாம் அடுக்கரியாது*
*இருக்க, மனத்து அருள்வ தாகித்*
*தடுக்கரிய தழல்உருவத்து ஒருவரையாய்*
*இருவரையும் தடுப்ப தானான்!''*

தேவர்களும் முனிவர்களும் நடுக்கம் தீரவும், திருமாலும் பிரமனும் பகைமை நீங்கவும், அண்டகோடிகள் எலாம் அடுக்கழியாமல் இருப்பவும், திருவுளங்கொண்டு தடுத்தற்கரிய நெருப்புருவோடு கூடிய ஒரு மலையாகி, அவ்விருவரையும் தடுக்கும்படி சிவபெருமான் எழுந்தருளினார்.

அந்த ஒளிமயமான மலையைப் பார்த்துத் திருமாலும் பிரமனும் துன்பமுற்று, அளவு கடந்துள்ள இந்த மலையினது அடியையாவது முடியையாவது அறிகின்றவரே பெரியவர் என்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

அப்பொழுது திருமால், ''இந்த மலையின் அடியை நான் அறிந்து வருகிறேன்'' என்று வராகவடிவானார். இந்த மலையின் முடியைக் காண்கிறேன் என்று பிரமனார் அன்னப் பறவையாகி வானில் விரைவாகப் பறந்தார். அரைக்கணத்தில் பிரமதேவர் ஆயிரம் காதவழி மேலே பறந்து போனார். திருமால் பூமியைத் துளைத்துக் கொண்டு ஒரு நொடியில் ஆயிரம் காதம் கீழாகப் போனார்.

வராக வடிவெடுத்த திருமால் மண்ணுலகைக் கடந்து கீழிருக்கின்ற ஏழுலகத்தையும் துளைத்துக் கொண்டு போய் மாவலிச் சக்கரவர்த்தி காவல் இருக்கும் போகவதி நகரைத் தாண்டிச் சென்று, பிறகு பரப்பிரம வடிவாய் விளங்கும் சிவபிரான் வீற்றிருக்கும் ஆடகேசுரத்தைக் கண்டு, கைகளினாலும், தலையினாலும் வணங்கி ஏழுலகங்களையும் கடந்த பிறகும் அந்த அடியைக் காணமுடியாமல் திகைத்தார். பன்றியுருவங் கொண்ட திருமாலின் இரண்டு கொம்புகளும் குறைந்து தேய்ந்து மழுங்கிக் குளம்புகளும் முகத்து நுனியும் அம்மலையைத் தேடும் ஆசை போன்று குறைந்து போயின. திருமால் துயர்க் கடலில் வீழ்ந்து நூறு தேவயாண்டுக் காலம் தேடியும் அடியைக் காணாமல், பின்பு தெளிவுற்று, ''இது சிவனுடைய செயல்'' என்றறிந்து போற்றித் தமது இளைப்பும் சலிப்பும் நீங்கப்பெற்றுத் திரும்பிப் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்ந்தார்.

''பிரமன் இந்த மலையின் முடியை அறிய மாட்டான்'' என்று ஐயமற முடிவு செய்து சிவபிரானைப் பலமுறை பணிந்து வணங்கி நின்றார்.

திருமால் செயல் இவ்வாறிருப்ப, அனற்பிழம்பின் முடியைத் தேட அன்னப் பறவையாகிச் சென்ற பிரமன், அரை வினாடியிலே ஆயிரம் காதவழித் தாண்டினான். ஆயிர வருட காலம் வரை நூறாயிரம் காதம் தாண்டிப் போய்ப் பார்த்தாலும் முடிவில்லாமல் இருந்தது அந்தத் தழல் தூண். பிரமன் அன்னமாய்ப் பறந்து போனபோது சிறகுகள் உதிர்ந்து போயின; வேகம் தணிந்தது; துயரமும் பெருமூச்சும் தோன்றின; தனிமையாக இருந்தபடியால் பிரமன் சிலவற்றை மனதில் எண்ணினான். ''இந்த அனற்பிழம்பின் அடியைத் திருமால் இந்நேரம் கண்டு திரும்பியிருப்பானோ?'' என்றெல்லாம் எண்ணிச் சோர்ந்தான். ''இத்துணைக் காலம் தேடியும் முடியினைக் காண முடியவில்லை. திருமாலிடத்தில் பார்த்தேன் என்று பொய் சொல்லினாலும், எனக்கு ஆதரவாகப் பொய்ச் சாட்சி சொல்வதற்கு ஒருவரும் இல்லையே'' என்று வருந்தினான். அச்சமயம் தாழம்பூ மடல் ஒன்று மேலிருந்து இறங்கிவரப் பார்த்தான் பிரமன். தாழம்பூ அருகிலே வர அதனைக் கையாலே பிடித்தான். ''அழகிய தாழம்பூவே! நீ எங்கேயிருந்து வருகின்

றாய்?'' என்றான். அதற்குத் தாழம்பூ, 'பிரமனாலும் திருமாலாலும் அறியக் கூடாத சிவபிரானுடைய முடியிலிருந்து தவறி விழுந்து விட்டேன்; நாற்பதி னாயிரம் ஆண்டுகளாக வந்தேன்; நான் இன்னும் உலகினை அடைய முடியவில்லை'' என்று கூறிற்று.

''தகுதி வாய்ந்த தாழம்பூவே! நான் பிரமன்; நானும் திருமாலும், அழல் உருவான இம் மலையின் அளவை அறிந்துகொள்ள விரும்பினோம்; அடியை அவன் தேடப் போனான்; நான் இதன் திருமுடியைக் காண நீண்ட காலம் அலைந்தும் காண முடிய வில்லை. நடைபெற்ற செய்தி இதுவேயாம். நீ திருமா லிடம், பறவையாய் உருவெடுத்த இப்பிரமன் சிவ னுடைய முடியைக் கண்டான் என்று சொல்ல வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான்.

*''வஞ்சம் என்று இகழ்ந்திடேல்; வருந்தி னார்க்குஉயிர்த்*
*தஞ்சமாம் எனில் பெரும்பொய்யும் சாற்றலாம்;*
*அஞ்சியே சொலத்தகா மொழிவும் அன்றிது;*
*நஞ்சும்உண்டு அமைவரே நண்பு வேண்டினார்''*

என்று தாழம்பூவிற்கு ஊக்கமும் ஊட்டினான் பிரமன். தாழம்பூவும் பொய் கூற இசைந்தது.

தாழம்பூவுடன் பிரமன் திருமாலிடத்திற்கு வந்தான். வந்து நின்று ''திருமாலே! ஒரு நொடியிலே நூறாயிரம் காதம் பறந்து, சிவபிரானுடைய திரு முடியைக் கண்டு வந்தேன்'' என்று சொல்லினான் பிரமன். தாழம்பூவும் ''உண்மைதான்; பார்த்தான்'' என்று சொல்லிற்று.

*''அக்கணம் அழற்கிரி வெடித்தது; வெடித்தஅர*
*வத்தினில் அரக்கர் இமையோர்*
*உக்கனர்; திசைக்களிறு கக்கின; அருக்கரை*
*உருக்கியது எனக்கு ருதிநீர்*
*செக்கர்ஒளி மட்கிட முருக்கிதழ் கறுக்கமெய்*
*சிவப்பொளி வெளுத்த வடிவாய்*
*முக்கணன் அதற்கிடை முளைத்தனன் முகத்திலவன்*
*முப்புரம் எரித்தநகையே.''*

அவ்வாறு பிரமன் சொல்லியவுடனே, தழல் மலை படீரென்று வெடித்தது; அவ்வோசை கேட்டு இராக்கதர் தேவர் ஆகியோர் திடுக்கிட்டு உயிர் சோர்ந் தனர்; எண்டிசை யானைகளும் இரத்தத்தைக் கக்கின. அவ்வெடிப்பினின்றும் முப்புரித்த எரித்த நகை திகழ, திருநீற்றின் ஒளி விளங்கச் சிவபெருமான் எழுந்தருளி னார். ''பிரமனே! ஆணவத்தால் நீ சொல்லிய பொய் வார்த்தைகள் மிக நன்றாயிருக்கின்றன'' என்று சிவ பெருமான் நகைத்த காலத்தில் அண்ட கோளங்கள் எல்லாம் கிடுகிடென்று நடுங்கின. பகலவன் ஒளியும் மதியொளியும் மங்கிப் போயின; மேகங்கள் மறைந் தன; பரவியிருந்த மரங்கள் எல்லாம் கரிந்தும் பொரிந் தும் போயின. தேவர்கள் எல்லோரும் ''பிரமன் அழிந்து போனான்'' என்று அஞ்சினார்கள்; தேவர்கள் மலர் மாரி பொழிந்தனர். திருமாலுக்கு மகிழ்ச்சி பிறந்தது; பிரமனுடைய ஆணவம் என்னும் இருள் நீங்கிற்று; தாம் முதற் கடவுள் அல்லர் என்று தெளிந்த திருமால், அழல் மடையிடத்திலிருந்து எழுந்த சிவபிரானைப் பாடினார்; பரவினார்; பணிந்தார்.


அன்புடன் வணங்கிய திருமாலுக்கு அவர் வேண்டிய வரங்கள் அனைத்தையும் அளித்தார் சிவ பெருமான். பிரமனைப் பார்த்து, ''உனக்குப் பூமியில் கோயிலும் பூசையும் இல்லாமல் போவதாக!'' என்றார். தாழம்பூவைப் பார்த்து, ''நீ பிரமனுடன் சேர்ந்து பொய்ச் சாட்சி கூறியபடியால் உன்னை இன்று முதல் தீண்டேன்'' என்றார். திருமாலைப் பார்த்து ''எனக்குச் சமமாக உனக்குப் பூமியில் கோயிலும் பூசையும் உண் டாகுக!'' என்றார். பிரமன் சிவபிரானை நோக்கி,

*''பொடிமுடிய தழலேநிகர் புலைஆணவ மலமாம்*
*செடிமுடுகை யாலேவுழல் சிறியேன்ஒரு*
*பொருளோ?*
*வடிவே! பெருவெளியே! சதுர்மறையே! சதுர்*
*மறையின்*
*முடிவே! தனிமுதலே! எனைமுனியேல்! எனை*
*முனியேல்!''*

என்றான். ''நீறுபூத்த நெருப்பு போன்றவனே! ஆணவ மலஅழுக்கு எனும் செடி மூடிக் கொண்டிருப்பத னால், சிறியேனாகிய யான் ஒரு பொருளோ? அகண்ட வெளியானவரே! என்மேல் சினம் வேண்டாம்! சினம் வேண்டாம்! யாவராலும் அறியக்கூடாத உம்முடைய திருமுடியை அறிவேன் யான என்று ஆணவமுற்ற அப்போதே பறவையானேன். அந்தத் தண்டனையே எனக்குப் போதும். எனக்கு அருள் புரிவீர்!'' என்றார்.

*''அறிதற்கரி தாம்உன்முடி அறிவேன்எனும் அளவே*
*பறவைப்படி வானேன்இனி மேலாஇடர் படுவேன்*
*சிறுமைப்படும் என்பாலருள் செய்யென்றுரை*
*செய்தான்*
*மறுகிக்குளிர் அனல்போல்இறை மகிழ்வாய்இவை*
*மொழிவான்''*

சிவபிரான், பிரமனையும் திருமாலையும் நோக்கி''யாம் இத்தலத்தில் உமக்கு அருள்பாலித்து வரம் கொடுத்தமையால் இன்று முதல் இத்தலத்தைச் சுற்றி மூன்று யோசனை தூரம் வரைக்கும் தூய்மை யான புனிதத் தலமாக இருக்கும். இந்த அகண்ட ஒளி வடிவாயுள்ள மலை சிறிய உருவங் கொண்ட மலை யாகும்; இத்தலத்தை நினைப்பவர்க்குப் பிறவி



நோயை நீக்குவோம்; இந்த மலையும் நகரமும் பிரளய காலத்திலும் அழிவின்றி நிற்கும்'' என்றார். அப்போது பிரமனும் திருமாலும் சிவபிரானை நோக்கி, ''பெருமானே! இந்த மலையின் உச்சியில் ஒரொளி எந்நாளும் தெரியுமாறு அருள வேண்டும்'' என்றார்கள். சிவபிரான் அவர்களிடம், ''கார்த்திகை மாதத்தில் கிருத்திகை நட்சத்திரத்தில் மலையின் உச்சியில் ஒரொளி காண்பிப்போம். இவ்வொளியைக் கண்டு தொழுவோர் தம், இருபத்தொரு தலைமுறையில் உள்ளவர்களுக்கும் வீடுபேற்றினை யளிப்போம்'' என்றார்.

*''கார்த்திகைக்குக் கார்த்திகைநாள் ஒருசோதி*
*மலைமீது காட்டாநிற்போம்;*
*வாய்த்துவந்த சுடர்காணில் பசிப்பிணியில்*
*லாதுலகில் மன்னி வாழ்வார்*
*பார்த்திவர்க்கும் அருந்தவர்க்கும் இடையூறு*
*தவிரும்இது பணிந்தோர் கண்டோர்*
*கோத்திரத்தில் இருபத்தோர் தலைமுறைக்கு*
*முத்திவரம் கொடுப்போம் என்றார்.''*

அன்றியும் பிறப்பினை அறுத்தற்குரிய மேலான மருந்து; ஆதலால் இந்த மலைக்கு, மலை மருந்து என்றும் ஒரு பெயர்; சிவப்பு நிறமுடையதாகையால் அருணகிரி என்றும் ஒரு பெயர்; இம்மலையை ஒரு முறை சொல்லியவர், திருஐந்தெழுத்தினை மூன்று கோடி முறை உச்சரித்ததற்குரிய பயனை அடைவர்'' எனச் சிவபிரான் திருவாய் மலர்ந்தருளினார்.

அப்போது திருமாலும் பிரனும் ''இறைவா! தாங்கள் மலைவடிவாக இருப்பின் யாங்கள் எவ்வாறு நீராட்டி அருச்சிக்க இயலும்? ஆதலால், இம்மலையின் கீழ் இலிங்க வடிவாய் எழுந்தருள வேண்டும்'' என்று வேண்டினர். ''அப்படியே இலிங்கமாகிறோம்; நீங்கள் முறைப்படிப் பூசியுங்கள்'' என்று அந்த மலையி னுள்ளே மறைந்தருளினார். பின்பு உலகனைத்தும் புகழுமாறு மலையின் கீழ் ஓர் இலிங்கம் தோன்றிற்று. பிறகு ஆங்கே நகரும் முந்நூற்றறுபது திருக்குளங் களும் தோன்றின. பிரமனும் திருமாலும் இத்தீர்த்தங் களில் மூழ்கி மரஉரி அணிந்து, சடையை இலிங்க வடிவாகக் கட்டித் திருநீறணிந்து உருத்திராக்கம் பூண்டு திருவண்ணாமலையை வலம் வந்து வணங்கிப் பதினாலாயிரம் ஆண்டுகள் ஆன பின்பு சிவபிரானிடம் விடைபெற்றுக் கொண்டு தாங்கள் தங்கள் பதிக்குச் சென்றார்கள்.

இவ்வாறாக, மார்க்கண்டேய முனிவர்க்கு திருஅண்ணாமலை திருத்தல மகிமையை நந்திதேவர் உரைத்தருளினார்.

நன்றி: முதுபெரும் புலவர் அ. பாண்டுரங்கனா ரின் **''அருள்நிறை அண்ணாமலை'' நூல்.**

**நூல் வேண்டுவோர் நாட வேண்டிய முகவரி:**

அருள்மொழிப் பதிப்பகம்,
118, சின்னக்கடைத் தெரு,
திருவண்ணாமலை - 606 601.

விலை : ரூ. 60/-

★ ★ ★

# மகாமக விழாவின் சிறப்பு

- முனைவர் த. அமிர்தலிங்கம்

இப்புவியில் உள்ள திருத்தலங்கள் ஒவ்வொன்றும் புனிதத் திருத்தலங்கள்தாம்.

இங்கு வாழும் மக்கள் செய்யும் பாவங்கள் காசியில் சென்று கங்கையில் நீராடத் தீர்ந்து போகும்.

காசியில் வாழும் மக்கள் செய்யும் பாவங்கள், கும்பகோணம் வந்து மகாமகத் தீர்த்தத்தில் நீராட தீர்ந்துபோகும்.

கும்பகோணத்தில் வாழும் மக்கள் பாவம் செய்தால் அவர்கள் வேறு எங்கும் சென்று பரிகாரம் தேட வேண்டுவதில்லை.

மகாமகத் தீர்த்தத்தில் நீராட கும்பகோணத்தில் வாழும் மக்கள் பாவங்கள் விலகி ஓடிவிடும்.

ஆகவே காசியைவிடவும் சிறந்தது என்பது மட்டுமல்ல. உலகிலேயே மிக உன்னதமான திருத்தலம் கும்பகோணம் என்பதும், உலகிலேயே மிக உன்னதமான தீர்த்தம் மகாமகத் தீர்த்தம் என்பதும் தெளிவாகத் தெரிகின்றது.

இத்தகைய கும்பகோணத்தில் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை குரு சிம்மராசியில் இருக்க மாசிமாதத்தில் மக நட்சத்திரம் கூடிய பௌர்ணமியில் கொண்டாடப்படும் மகாப் புண்ணியத் திருவிழா தான் மகாமகம் விழா என்பது குறிப்பிடத்தக்கது.

பாரத தேசத்தின் புண்ணிய நதிகளான கங்கை, யமுனை, சரசுவதி, காவிரி, கோதாவரி, நர்மதை, மகாநதி, பாலாறு, சரயு ஆகிய ஒன்பது நதிகளிலும் மக்கள் நீராடித் தத்தம் பாவங்களைப் போக்கிக் கொள்கின்றனர்.

மக்களின் பாவங்களை ஏற்கின்ற புண்ணிய நதிகள் மகேஸ்வரனின் திருவடிகளைப் பணிந்து ''மக்கள் பாவங்களைத் தீர்ப்பதால் உண்டாகும் எங்கள் பாவங்கள் தீர என்ன வழி?'' என்று வேண்டின.

''நதிகளே! கவலை வேண்டாம்! குடந்தையில் உள்ள மகாமகத் திருக்குளத்தில் குரு சிம்மராசியில் நிற்கும், மாசி மாதத்தில் மக நட்சத்திரத்துடன் கூடிய பௌர்ணமி நன்னாளில் நீங்கள் நீராடுவீர்கள் ஆனால் உங்கள் பாவம் யாவும் தீரும்'' என்று கூறித் திருவருள் புரிந்தார் சிவபெருமான்.

யுகயுகங்களாக நடைபெற்றுவரும் மகத்தான விழா மகாமக விழா. பிரம்மாவும் முப்பத்து முக்கோடி தேவர்களும் முன்னின்று நடத்தும் விழா மகாமகவிழா. ஈரேழு பதினான்கு உலகங்களும் கொண்டாடும் மகத்தான விழா மகாமகவிழா.

ஒரு ஊழிக் காலத்தின் முடிவில் பிரளவ வெள்ளத்தில் உலகம் அழியப் போகும் தருணத்தில் பிரம்மா ஆதியந்தம் இல்லா அருட்பெருஞ்சோதியான சிவப்பரம்பொருளிடம் சென்று ''வேத சாத்திரங்கள், சிருஷ்டி பீஜம், தீர்த்தங்கள், சேத்திரங்கள் முதலியவை அழிந்து நசிந்துவிடா வண்ணம் பாதுகாத்துத் தர வேண்டும்'' என வேண்டினார்.

''என்னால் உண்டாக்கப்பட்ட சிருஷ்டி பீஜம் நிலையானது; அழிவற்றது. அமிருதத்தோடு கலந்து சிருஷ்டி பீஜத்தைப் புண்ணிய குடத்தில் வைத்து, அக்குடத்தின் உள்ளேயே வேதசாஸ்திர புராணங்களையும் வைத்து மகாமேரு மலையின் உச்சியில் வைத்து உன் இருப்பிடம் செல்'' என்று பரம்பொருள் அருளினார்.

பிரம்மாவும் அவ்வாறே புண்ணிய மண்ணில் குடமொன்று செய்து அதனுள் அமிருத்துடன் கூடிய சிருஷ்டி பீஜத்தையும், வேத சாஸ்திரங்களையும் பாதுகாத்து வைத்து, குடத்தினைப் பத்திர, புஷ்ப, பல உபவீத, கூர்ச்சாதிகளால் அலங்கரித்து, தர்ப்பைப் புற்களால் செய்யப்பெற்ற உரியில் வைத்து, மகாமேருவின் சிகரத்தில் வைத்துப் புறப்பட்டார்.

பிரளயம் வந்தது. பூவுலகம் முழுதும் வெள்ளக் காடு ஆனது. நாடு, நகரம், வனம் எல்லாம் பிரளயம். உலகமே நீருக்குள் மூழ்கிக் கிடந்தது.

பிரளய வெள்ளத்தில் மேருவின் சிகரத்தில் வைக்கப்பட்ட குடம் என்னவானது என்பதைத் தெரிந்து கொள்வோம்.

மாயப் பிரபஞ்ச சிருஷ்டியின் நிமித்தம், இறைவ ராலே உண்டாக்கப் பெற்ற அக்குடம், பிரளய வெள்ளத் தில் புரண்டு மிதந்து கொண்டே வந்தது. சண்ட மாருதக் காற்று அதனைத் தள்ளிக் கொண்டே தென்னகம் வந்து இன்று குடந்தை உள்ள இடத்திற்கு அக்குடத்தைச் சேர்த்தது.

பிரளய வெள்ளம் அடங்கக் குடம் வந்து நின்ற இடமே உத்தமமான சேத்திரம் என தேவர்கள் வந்து மலர்மாரி பொழிந்தனர். ஜெயபேரிகை முழங்கினர்.

பிரளய வெள்ளத்தில் பிரசண்ட மாருதத்தின் வீச்சினால் குடத்தின் மேல் இருந்த பல தெய்வீகப் பொருள்கள் சிதறி விழுந்த ஒவ்வொரு இடமும் புனிதத் தன்மையோடு இன்றும் குடந்தையைச் சுற்றி லும் விளங்கும் தெய்வீகத் திருத்தலங்களாக விளங்கு வது குறிப்பிடத்தக்கது.

மீண்டும் பிரபஞ்சத்தை உருவாக்க வேண்டிய நேரம் வந்தது. பிரமன் முதலான தேவர்கள் வேண்ட சிவகணங்களை வேடர்கள் ஆக்கி, வேட்டுவ வடிவில் வந்த சிவபெருமான் தமது அம்பினால் அமுத குடத்தை உடைத்தார்.

குடத்திலிருந்து அமுதம் வெளிப்பட சிறிது மண்ணையும் மணலையும் அமுதத்துடன் கலந்து கும்பலிங்கத்தைச் சிவபெருமான் உண்டாக்கி அந்த கும்பலிங்கத்திற்கு அமுதாபிஷேகம் செய்து அந்த லிங்கத்தில் ஐக்கியம் ஆனார் சிவபெருமான்.

தேவர்கள் கீதம்பாட, அப்சர கன்னியர் நட மாடிய அந்த ஆனந்த வேளையில் உமாதேவியை வரவழைத்து கும்பலிங்கத்திற்கு வடபாகத்தில் ''மங்களாம்பிகை'' எனும் திருநாமத்தோடு பிரதிட்டை செய்தார் சிவபெருமான்.

இவையாவும் நடைபெற்றது மகாமக நாளில் என்பது குறிப்பிடத்தக்கது. கும்பலிங்கத்தைக் கும்பேசுவரர் எனவும், அம்பிகை மங்களாம்பிகை எனவும் பிரதிட்டை ஆயினர். உலகப் படைப்பிற்கு மூலகாரணமாக ஆதியில் தாமே ஆணையிட்டு உரு வாக்கிய அமுத குடத்தில் ஐக்கியமானபடியால் இறைவர் ஆதி கும்பேசுவரர் எனச் சிறப்பிக்கப்படு கின்றார்.

இத்திருக்கோயிலில் படைப்பிற்கு உறுதுணை யாய் அமைந்து, தம்மை வழிபடும் அன்பர்களுக்கு திவ்விய மங்களத்தை அளித்து அருள்வதால் அம்பிகைக்கு ''மங்கள நாயகி'' என்பது திருநாமம். ''மந்திர பீடேஸ்வரி'' எனவும் அம்பிகை திருநாமம் வழங்கப்பட்டு இத்திருத்தலம் சக்தி பீடங்களுள் ஒன்றாகவும் திகழ்கின்றது.

சிவபெருமானால் பிளக்கப்பட்ட குடத்திலிருந்து வெளிப்போந்த அமுதம் இரண்டு கிணறுகளாகத் தேங்கி நின்றது. இவையே பொற்றாமரைக்குளமும், மகாமகக்குளமும் ஆகும்.

பொற்றாமரைக் குளம் சாரங்கபாணி சுவாமி கோயிலில் உள்ளது.

மகாமகக்குளம் குடந்தை நகருக்கு நடுவே 20 ஏக்கர் பரப்பில் அமைந்து விளங்குகின்றது. இத்தீர்த் தத்தின் கரையில் நாற்றிசைகளிலும் 16 மண்டபங் களுடன் கூடிய சிவன் கோயில்கள் அமைந்துள்ளன.


அக்கோயில்களில் முறையே

1. பிரம்ம தீர்த்த ஈசுவரர்
2. முகுந்த ஈசுவரர்
3. தன ஈசுவரர்
4. இடப ஈசுவரர்
5. பாண ஈசுவரர்
6. கோண ஈசுவரர்
7. பைரவ ஈசுவரர்
8. பக்திகேசுவரர்
9. அகத்தீசுவரர்
10. வியாச ஈசுவரர்
11. உமா பாகேசுவரர்
12. நிருதி ஈசுவரர்
13. பிரம்மேசுவரர்
14. கங்காதரேசுவரர்
15. முக்தி தீர்த்தேசுவரர்
16. சேத்திர பாலேசுவரர்

ஆகியோர் எழுந்தருளியுள்ளார்கள்

மகாமகக் குளத்தில் 66 கோடி தீர்த்தங்கள் அடங்கி யிருப்பதாக ஐதீகம்.

அமுதத்தினால் நிரம்பிய இம்மகாமகத் திருக் குளத்தில் நீராடிப் புண்ணிய நதிகளே தத்தம் அழுக்கைப்



போக்கிக் கொள்கின்றன என்றால், மானிடர் ஆகிய நாம் நீராடினால் பெறக்கூடிய பலன்களைக் கூறவும் வேண்டுமோ?

மகாமகக் குளத்திற்கு மேலும் 5 திருப்பெயர்கள் உண்டு.

**1. மாக சரோவரம்**

பாவங்களை இல்லையாக்கும் புண்ணிய தீர்த்தம் என்பது இதன் பொருள்.

**2. கன்யா தீர்த்தம்**

கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, கோதாவரி, காவேரி, மகாநதி, பாலாறு, சரயு ஆகிய நவ கன்னியர்கள் ஆடிய தீர்த்தம் என்பதால் ''கன்யா தீர்த்தம்'' என்பது இதன் பெயர்.

**3. பாப பநோதனம்**

கொலை, கொள்ளை, நரசோரம், பிரம்மஹத்தி முதலான பெரிய பெரிய பாவங்களையும் தீர்ப்பதால் பாப பநோதனம் என்பது பெயர்.

**4. சுதா தீர்த்தம்**

சிருஷ்டி பீஜகடத்தின் அமிர்தம் பெருகி வந்து உண்டான அமுதத் தீர்த்தம் என்பதால் ''சுதா தீர்த்தம்'' என்பது பெயர்.

**5. பகு தீர்த்தம்**

அநேக புண்ணிய தீர்த்தங்கள் சேர்ந்து இதற்கு நிகரான தீர்த்தம் வேறு இல்லை என்பதால் பகு தீர்த்தம் (அநேக தீர்த்தம்) என்பது பெயர்.

''பூமருவும் கங்கை முதல் புனிதமாம் பெருந்தீர்த்தம்
மாமகந்தான் ஆடுதற்கு வந்து வழிபடும் கோயில்''

என்று பெரிய புராணத்தில் மகாமக விழாவைச்சிறப்பிக்கின்றார் சேக்கிழார் பெருமான்.

''காவிரி நல் யமுனை கங்கை
சரசுவதி பொற்றாமரை புட்கரணி தெண்ணீர்
கோவியொடு குமரி வரும் தீர்த்தம் சூழ்ந்த''

என்று பாடிப் போற்றுகின்றார் அப்பர் பெருமான்.

இத்தகைய மகாமகத் திருக்குளத்தில் பிரம்மாதி தேவர்கள் எல்லாம் நீராடியுள்ளனர். நவ நதிகளும் நீராடியுள்ளனர். நாமும் வரக்கூடிய மகாமகப் புண்ணிய நன்னாளில் (6.3.2004) நீராடிப் பேரானந்தம் பெருவாழ்வு பெற்று இன்புறுவோமாக!

★★★

# அறநூல்களும் – அருள் நூல்களும் – ஒரு பார்வை ...

- முனைவர் இரா. செல்வக்கணபதி

திருவள்ளுவரை ஏற்றுக்கொள்ளும் சிலர், திருநாவுக்கரசரைச் சமயவாதி என்று முத்திரை குத்தி ஏற்க மறுக்கின்றனர். நாலடியாரை அறநூல் என்று ஒத்துக்கொள்ளும் பலர் நம்மாழ்வாரை ஒரு சமய நெறியில் வாழ்ந்தவர் என்று போற்றத் தவறுகின்றனர்.

இந்த அணுகுமுறை, சரியானதுதானா என்று, ஒரு பேராசிரிய நண்பர் என்னிடம் கேட்டார். நான் சிந்திக்கத் தொடங்கினேன்.

நீண்ட சிந்தனைக்குப் பின், அவர்கள் அணுகு முறை நியாயமற்றதாகவே தோன்றியது. அற நூல் களுக்கும் - சமய நூல்களுக்கும் பெரிய வேறுபாடுகள் அதிகம் இல்லை.

'அறஞ்செய்க' என்கின்றனர் திருவள்ளுவரும், நாலடி ஆசிரியர்களும்

அறத்தை, ஆண்டவன் பெயரால் செய்க என் கின்றனர் சமயவாதிகள்.

ஓர் உதாரணம் காட்டுகிறேன். நீங்களும் சிந்திக்கத் தொடங்கலாம். பொறாமைப்படாதே என்று கூறவரும் திருவள்ளுவர், பொறாமைப்பட்டால்? பொறமைக்காரன் சுற்றத்தார், உடுக்க உடையும் உண்ண உணவும் இன்றிக் கெடுவார்கள் என்று உறுதிபடக் கூறுகிறார்.

பொறாமை என்ற, மனத்தளவிலான குற்றத் திற்கு, இவை தண்டனை என்றால், தவற்றையும், தண் டனையையும் இணைப்பது எது? என்ற வினாவரும்.

ஒருவன் நூறு ரூபாய்த் திருடினான்; அவனுக்கு மூன்று மாதச் சிறைத் தண்டனை என்று செய்தி வந்தது. தவறையும், தண்டனையையும், சட்டம் என்ற ஒன்று இணைத்தது. சட்டம் தாமே தம் வேலையைச் செய்யுமா? அதனை நடைமுறைப்படுத்த ஒரு மன்னன்.

தலைவர், அதிகாரி வேண்டுமல்லவா?

அறநூல்களில், அறமே சட்டங்களாகும். நடை முறைப்படுத்தும் அதிகாரி, இறைவன் ஆவான். அறநூல் தொடங்கும் திருவள்ளுவரும், இதனை உணர்ந்தே கடவுள் வாழ்த்தும் அறன் வலியுறுத்தலும் வைக்கிறார்.

வள்ளுவர், பொதுப்பட இறைவன் என்கிறார். சமயவாதிகள், சிவன். திருமால், முருகன் என்று பெயர் சூட்டுகின்றனர். எனவே, அறநூல்கள், கடவுள் தத்துவத்தைப் புறக்கணித்து எழுந்தவை என்பது பொருத்தமான ஒன்று அன்று.

உயிர் வாழ்க்கையின் நிறைந்த பயன் அறம், பொருள், இன்பங்களில் தலைப்பட்டு வீடு அடை தலே என்பர் நூலோர்.

பல சொல்லக் காமுறாமல், சில சொல்லி விளக்கும், ஒரு நாலு வரிப்பாடலில், மேற்குறித்த நான்கு பற்றியும் சிறுசிறு விளக்கங்கள் தரப்பட் டுள்ளன.

எது அறம்? என்ற வினாவிற்குச் சுற்றி வளைக்காமல், 'ஈதலே அறம்' என்கிறது அந்தப் பாடல்.

சரி, அப்படி என்றால் பொருளாவது யாது?

ஒருவன், முயன்று ஈட்டுவது எதுவோ, அது பொருள் என்று கூறியிருந்தால் தவறு இல்லைதான்.

ஆனால், அந்தப் பாடல் வரி 'தீவினை சிறிதும் கலவாது ஈட்டப்படுவதே பொருள்' என்று பொருளும் அறநெறி வழுவாது ஈட்டப்பட வேண்டும் என்று கண் டிக்கிறது.

இன்பமாவது யாது என்பது, அடுத்து வரும் வினா? ஒருவரை ஒருவர் விரும்புவது என்று கூறிவி டாது பல அடைமொழிகள் சேர்த்து 'காதல் - இருவர் கருத்து ஒருமித்து, ஆதரவு பட்டதே இன்பம்' என்று மூன்று இலக்கணங்களை இன்பத்திற்குத் தருகிறது.

ஒன்று அன்பு - இதனைக் காதல் என்ற சொல் குறிக்கிறது. ஒத்தக் கருத்தினராதல் என்பதை, 'கருத்து ஒருமித்து' என்ற தொடர் சுட்டுகிறது. ஒருவருக்காக, மற்றொருவர் வாழ முனைவதை, 'ஆதரவுபடுதல்' என்று அடையாளப்படுத்துகிறது. எனவே, இன்பம் என்பது நாம் நினைப்பது போல் எளிதான ஒன்றன்று என்பது புரிகிறது. 'சிலர் அதன் செவ்வி தலைப் படுவார்' என்ற குறள் வரிதான் எத்தனை ஆழமானது.

பின் வள்ளுவத்திலும் வெளிப்பட விரித்துரைக்காத 'வீடு' என்பதற்கு விளக்கம் தேடுகிறோம்.

மேற்குறித்த மூன்றையும், முற்றிலுமாக விட்டு நீங்கும் நிலையே வீடு என்கிறது அந்தப் பாடல்.

இம்மூன்றும் விட்டதே பேரின்ப வீடு' என்பது, ஔவையின் அமுத மொழி. வீடு பேறு பெறும் நிலையில், அறம்கூட வேண்டா என்பது ஒரு சிறந்த நிலைப்பாடு.

இதுவரை, இந்தப்பாடல், அறநூல் பாடல் தான். ஆனால், ஒரு தொடர் இதனைச் சமயநூல் பாடலாக்க வருகிறது. 'அரனை நினைந்து, இம்மூன்று விட்டதே பேரின்ப வீடு' என்று 'சிவனை நினைந்து' என்று ஒரு தொடர், இடைபுகுந்து கொள்கிறது. 'அரனை நினைந்து' என்பதை, ஒவ்வொன்றோடும் இணைத்தல் வேண்டும்.

இறையுணர்வின் அடிப்படை அன்பும் - அச்சமும். இறைவனை நினைந்து செய்வதால், இவற்றின் திறம், மேலும் சிறக்குமே அன்றிக் குறையாது.

கடவுள் நினைவோடு அவற்றை இயற்றும் போது அவை மேலும் மேலும் ஒளிபெறும் என்பது நீளச் சிந்திப்பார்க்குப் புரியவே செய்யும்.

★★★

---

## நூல் மதிப்புரை

- நிறைமதி

நூலின் பெயர் : தெரிந்த கோயில்களும் தெரியாத விவரங்களும்

நூலாசிரியர் : வே. இராமசாமி, பி.காம்., எஃசி.ஏ.

நூல் வெளியீடு : தென்றல் நிலையம்
12 பி, மேல சன்னதி,
சிதம்பரம் - 608001.

நூலின் விலை : ரூ. 40.00

பக்கங்கள் : 168

''ஆலய விதிப்படி எல்லாக் கோயில்களும் அமைந்திருந்தாலும், ஒவ்வொரு கோயிலுக்கும் விசேடத் தன்மை இருக்கும். அதனால் அக்கோயில் சிறப்புப் பெறும். அந்தச் சிறப்பு எது? என்பதை இந்நூலாசிரியர் நேரில் சென்றும், பல நூல்களிலிருந்து தேடியும் கண்டுபிடித்துக் கூறுவது மிகுந்த பயன் தருவது'' ஆகும்.

498 அரிய விசயங்கள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

அவற்றில் சில பின்வருமாறு :

54. திருப்பெருந்துறை சிவன் கோயிலின் 9 அதிசயங்கள்
1. நந்திதேவர் இல்லை
2. கொடிமரம் இல்லை
3. பலி பீடம் இல்லை
4. பள்ளியறை இல்லை
5. சண்டிகேஸ்வரர் இல்லை
6. சின்னமேளம் இல்லை
7. பிரதோஷ வழிபாடு கிடையாது
8. இறைவனுக்குக் காட்டப்படும் கற்பூரம் சன்னதியை விட்டு வெளியே கொண்டு வருவதில்லை.
9. நவகிரகங்கள் ஒன்பது தூண்களில் இருக்கிறார்கள்.

130. அபிராமிக்கு முன் நந்தி வாகனம்: திருக்கடையூர் அபிராமி அம்மனுக்கு முன்பு நந்திதேவர் அமர்ந்துள்ளார்

239. கர்ப்பக் கிரகத்தில் கருடாழ்வார்

336. மனைவியரை மடியில் வைத்திருக்கும் நவக்கிரகங்கள்

488. குற்றாலத்தில் நாள்தோறும் சுக்குக்காப்பி நைவேத்தியம்

இவை போன்ற அரிய செய்திகளை அறிந்துகொள்ள இந்நூல் அனைவரும் வாங்கிப் பயன் பெறுக.

★★★

# திருமகள் வீற்றிருக்கும் திரு இடங்கள்

- பேராசிரியர் த. அகர முதல்வன், திருவெண்காடு

மகாலட்சுமி இருக்கும் இடங்களை அறிந்து அவற்றை வழிபட்டால் திருவருளைப் பெறலாம்.

1. திருமால் மார்பு:

திருமகள் திருமாலின் மார்பில் உறைகிறாள். ஆதலின் திருவுறைமார்பன் - ஸ்ரீநிவாசன் என்று திருமாலுக்குப் பெயர். திருமகளின் அருளைப் பெற திருமாலையும் வழிபட வேண்டும். திருமாலை விடுத்து திருமகளை மட்டும் வணங்கக் கூடாது. திருமகளைப் புருஷாகாரம் என்பர். அடியாருக்கு அருள்புரியும்படி திருமாலைத் தூண்டுபவள் திருமகளே.

2. பசுவின் பின்புறம்:

பசு தேவராலும், மூவராலும், முத்தேவியராலும் தொழப்படும் கோமாதா. காரணம், பசுவின் உடலில் ஒவ்வொரு பாகத்திலும் ஒரு தெய்வம் இருப்பதுதான். பசுவின் பின்புறத்தில் மகாலட்சுமி வாசம் செய்கிறாள். காலையில் எழுந்ததும் காணத் தக்கவற்றுள் பசுவின் பின் பக்கமும் ஒன்று. அருகம் புல்லைப் பசுவிற்கு கொடுப்பது 32 வகை அறங்களுள் ஒன்றாகும். 'யாவர்க்கும் ஆம் பசுவிற்கு ஒரு வாயுறை' என்றார் திருமூலர்.

3. யானையின் மத்தகம்:

யானையின் மத்தகம் பிரணவம் போன்றது - (ஓங்காரம் போன்றது) அங்கே திருமகள் வீற்றிருக்கிறாள்.

4. தாமரை:

மலர்களில் சிறந்தது தாமரை 'பூவெனப்படுவது பொறிவாழ் பூவே' என்றும், 'பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை' என்றும் கூறுவர். தாமரை செல்வத்தைக் கொடுக்கும். பொன்னின் அளவை பத்மநிதி, சங்கநிதி என்பர். பத்மம் என்றால் தாமரை. எல்லாத் தெய்வங்களுமே பத்மத்தில் தான் அமர்ந்துள்ளனர். பத்மாசனத்தில் அமர்வதே சிறப்பு. திருமகளுக்குரிய இடம் தாமரை ஆதலின் அவளை மலர்மகள் என்பர்.

பாற்கட லிடைப் பிறந்தாள் - அது
பயந்தநல் லமுதத்தின் பான்மை கொண்டாள்
ஏற்குமோர் தாமரைப்பூ - அதில்
இணைமலர்த் திருவடி இசைந் திருப்பாள்
(பாரதி)

5. திருவிளக்கு:

விளக்கின்றி பூஜையில்லை. எல்லாத் தெய்வங்களையும் விளக்கொளியில் வழிபடலாம். ஆதலின் வள்ளலார் அருட் பெருஞ்ஜோதியாய் ஆண்டவரைக் கண்டார்.

தேசவிளக்கெலாம் ஆனாய் நீயே!
திருவையாறு அகலாத செம்பொற்சோதி

என்றார் அப்பர்.

சோதியே! சுடரே! சூழ்ஒளிவிளக்கே!

என்றார் மணிவாசகர்.

எல்லாத் தெய்வங்களும் விளக்கில் இருப்பினும் விளக்கை இலட்சுமியாகக் கருதுவது நம் மரபு.

6. சந்தனம்:

மங்கலப் பொருளான சந்தனத்தில் மகாலட்சுமி உறைகிறாள். தெய்வங்களுக்குரிய சோடச உபசரணையில் சந்தனம் அணிவிப்பதும் ஒன்று. சுபகாரியங்களில் சந்தனம் அவசியம்.

7. தாம்பூலம்:

தாம்பூலம் மங்களகரமானது. சுபகாரியங்களுக்கும் பூஜைக்கும் தேவையானது. தாம்பூலத்தை மாற்றிக் கொண்டால் சம்மதம் தெரிவித்தாயிற்று என்றே பொருள்.

8. கோமயம்:

பசுவிடமிருந்து வெளிப்படும் கோஜலம், கோமயம் (சாணம்) பால், தயிர், நெய் ஆகிய ஐந்தும்

இறைவனுக்குகந்தவை. இதனைப் பஞ்சகவ்யம் என்பர். 'ஐந்தாடுவான் அரன்' என்பார் அப்பர். வாயிலில் சாணம் தெளித்தால், வீட்டை சாணத்தால் மெழுகினால் கிருமிகள் வரா. இலட்சுமி வருவாள். பஞ்சகவ்யம் பருகினால் நோய் வராது. 'பஞ்ச கவ்யம் பரம ஔஷதம்' என்பர்.

9. கன்னிப் பெண்கள்:

தூய கன்னியர் தெய்வ நலம் பொலிபவர். அவர்களிடத்து இலட்சுமி கடாட்சம் உண்டு. பெண்ணைப் பார்த்தால் மகாலட்சுமி மாதிரி இருக்கிறாள் என்பது உலக வழக்கு. பெண்களின் தலை வகிட்டில் இலட்சுமி இருக்கிறாள். அங்கும் மகளிர் திலகம் இடுவர்.

10. உள்ளங்கை:

உள்ளங்கையில் இலட்சுமி உள்ளாள். காலையில் எழுந்ததும் கையைப் பார்க்க வேண்டும். கையை நம்பித்தான் வாழ்க்கையே இருக்கிறது. கையால் உழைத்தால்தான் தனலட்சுமியைக் காணமுடியும். கை என்றாலே சக்தி என்றுதான் பொருள். அவர் பெரிய கை என்றால் அவர் செல்வமுடையவர் என்று பொருள்.

11. பசுமாட்டின் கால்தூசு:

புனிதமான பசுவின் பாதம் பட்ட இடத்தில் பாவம் நில்லாது. அதன் கால் தூசு பட்ட இடத்தில் செல்வம் கொழிக்கும். மாடு என்றால் செல்வம்தானே!

12. வேள்விப் புகை:

வேள்விப்புகை உயிர் காக்கும். போபாலில் வேள்வி நடந்த இரு வீடுகளுக்குள்ளே நச்சுக்காற்று நுழையவில்லை. வேள்விப்புகை ஆரோக்கியம் தரும். வேள்விப் புகையில் வானம் பொழியும். வையகம் செழிக்கும்.

13. சங்கு:

சங்கும் அதன் ஒலியும் மங்களகரமானவை. நிதியின் ஓர் அளவை சங்கம் என்பர். 'சங்கநிதி... பதும நிதி இரண்டும் தந்து' எனும் நாவரசர் சொல் உணர்க.

14. வில்வ மரம்:

வில்வ மரத்தடியில் ரைவத மன்வந்திரத்தில் மகாலட்சுமி தோன்றினாள். வில்வம் சிவபெருமானுக்கு உகந்த பத்திரம். அதைவிடச் சிறந்த பத்திரம் ஒன்றும் இல்லை. வைணவத் தலமான ஸ்ரீரங்கத்தில் தல விருட்சம் வில்வம்; திருநகரிக்கு வில்வாரண்யம் என்று பெயர். திருவஹிந்திரபுரத்தில் மகாலட்சுமிக்கு வில்வத்தால்தான் அர்ச்சனை. வில்வ மரத்தடியில் செல்வம் தரும் நாயகி வசிக்கிறாள்.

வில்வமே புனிதனாகும் விளம்பு
வில்வத்தின் மிக்காம்
வில்வமுள் சக்தியாகும் வில்வத்தின்
கோடு வேதம்
வில்வவேர் பதினொருகோடி வியன்
உருத்திரரே ஆகும்
வில்வமேத்து நாக்கே தேவர்
மெய்வடி வாகுமன்றே!

(புட்ப பலன்)

15. நெல்லி மரம்:

நெல்லி ஆயுளை வளர்க்கும்; ஆரோக்கியந் தரும். அதனடியில் மகாலட்சுமி உறைகிறாள். நெல்லி திருமாலின் அருள் பெற்றது. ஹரிபலம் என்று இதற்கு ஒரு பெயர். நெல்லிக்கனி இருக்கும் வீட்டில் இலட்சுமி இருப்பாள். துவாதசியன்று நெல்லிக்காய் சேர்த்தால்தான் ஏகாதசிப் பலன் உண்டு.

16. தர்ம சிந்தனை உடையாரின் உள்ளம்
17. வெண்ணிற மாடப்புறாக்கள் வாழும் இடம்
18. கலகமில்லாத மகளிர் வாழும் இடம்.
19. தானியக் குவியல்
20. கல்லும் உமியும் இல்லாத அரிசிக் குவியல்
21. பணிவுடைமையும் இன்சொல்லும் உடையவன்
22. பகிர்ந்துண்டு வாழும் மனிதன்
23. நாவடக்கம் உள்ளவன்
24. மிதமாக உண்பவன்
25. பெண்களைத் தெய்வமாக மதிப்பவன்
26. தூய்மையான ஆடை அணிகிறவன்.

மேற்குறித்த இடங்களிலும் மனிதர்களிடத்தும் மகாலட்சுமி எப்போதும் இருக்கிறாள்.

'சத்தியம், தானம், விரதம், தவம், வீரம், தர்மம் ஆகியவைகளில் நான் எப்போதும் இருக்கிறேன். என்னை நான்காகப் பிரித்து வழிபடு. உன்னை விட்டு நீங்காமல் இருப்பேன்' என்று இலட்சுமி இந்திரனிடம் கூறினாள். இந்திரன், இலட்சுமியை பூமி, நீர், நெருப்பு, உண்மை பேசும் மனிதர் ஆகிய நான்கு இடங்களிலும் வைத்து வழிபட்டான். ஆதலின் பூமி, நீர், அக்னி, சத்யம் ஆகியவையும் மகாலட்சுமியின் இருப்பிடங்களாகும்.

★★★

## காஞ்சி மாவட்டம் உத்திரமேரூர் வட்டம்

# திருப்புலிவனநாதர்

- மருதவாணன்

நவகிரஹங்களில் ஒன்றான குரு வேறு! ஆலயங்களில் உள்ள தட்சிணா மூர்த்தி வேறு! சிலர் தட்சிணா மூர்த்தியையே நவகிரஹ குருவாக நினைத்துக் கொள்கின்றனர். எல்லாத் தெய்வங்களுக்கும் தேவர்களுக்கும் சிவபெருமானே 'அந்தர்யாமி' (ஆத்மாவாக விளங்குபவர்) என்கிற வகையில் வேண்டுமானால் அது சரியானதாக இருக்கலாம். ஆனால் கிரஹமும் தெய்வமும் வேறு, வேறு என்பதை அனைவரும் உணர வேண்டியது அவசியம். பின்னர் ஏன் குரு பெயர்ச்சியின் போது பொதுமக்கள் அனைவரும் தட்சிணாமூர்த்திக்கு வழிபாடு செய்கின்றனர்....? அதற்கு ஒரு விசேஷமான பின்னணி இருக்கிறது.

தட்சிணா மூர்த்திக்கு ''ஆதிகுரு'' என்ற திருநாமம் உண்டு, உலகின் முதல் குருநாதர் சிவபெருமானே என்பதால் இப்படியோர் அற்புதப் பெயர் அவருக்கு ஏற்பட்டது. அதுமட்டுமின்றி எல்லாக் குருமார்களுக்கும் தட்சிணாமூர்த்தியே அந்தர்யாமியாக விளங்குகிறார். அவரிடமிருந்தே சகலமானவர்களும் ஞானத்தைப் பெறுகின்றனர். நவகிரஹங்களில் ஒருவரும், வேத குருவுமான பிரகஸ்பதிக்கும் அவரே உள்ளிருந்து இயக்கும் சக்தியாக விளங்குகின்றார்.

அந்த வகையில் குரு பெயர்ச்சியின்போது ஆதி குருவான தட்சிணாமூர்த்தியை வழிபடுவதில் எவ்விதப் பிழையும் கிடையாது. ஆனால் அப்படி வணங்கும்போது கிரஹங்கள் அனைத்துக்கும் ஆற்றலை வழங்கும் பரம்பொருள் சிவபெருமான் என்ற தெளிவோடு பூஜிப்பது சிறப்புடையது. ஒருவேளை இந்தத் தத்துவம் புரியாது தட்சிணாமூர்த்தியையே ''குருகிரஹமாக'' நினைத்துப் பூஜித்தாலும் தவறில்லை. ஏனெனில் அந்த மூர்த்திக்கு நமது உணர்வுகள் புரியாதிருக்குமா என்ன? எனவே அவரே நமது பூஜையின் பலனை ஏற்று, அந்தந்தக் கிரஹங்கள் மூலம் ஏற்படக் கூடிய துயரங்களைத் தீர்த்து, வரங்களையும் வழங்கி விடுவார். இது புரிந்துவிட்டால் குருவுக்காக மட்டுமல்ல, எல்லாக் கிரஹ பரிகாரத்துக்கும் தட்சிணாமூர்த்தியையே பூஜிக்கலாம் என்ற பேருண்மை விளங்கிவிடும். 'ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி பாம்பிரண்டும் உடனே ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல, அடியாரவர்க்கு மிகவே' என்ற திருஞான சம்பந்தரின் தேவார வரிகளே இவ்வுண்மைக்கு மாபெரும் சான்றாகும்.

இது ஒருபுறமிருக்க, தட்சிணா மூர்த்தியோடு குருவுக்கு உள்ள தொடர்பு மேலே கூறப்பட்டுள்ள காரணத்தை விடவும் நுட்பமான பொருள் பொதிந்தது என்பதில் ஐயமில்லை. ஒருவன் அடைய வேண்டிய பாக்கியங்களை தர்மம், அதர்மம், காமம், மோட்சம் என்று நான்காகப் பிரித்துள்ளன நமது சாஸ்திரங்கள், இவற்றுக்கு ''சதுர் வித புருஷார்த்தங்கள்'' என்று பெயர், வேதம், குருத்வம், பணவசதி, உடல் நலம், திருமணம் மற்றும் மக்கள் பேறு ரத்தினங்கள், உணவு, போன்ற பல விஷயங்களுக்கு அதிதேவதையாக விளங்குபவர் நவகிரஹ குரு. இவையனைத்தும் தர்மம், அதர்மம், காமம் என்ற மூன்று புருஷார்த்தங்களுக்குள் (அடைய வேண்டிய நற்பேறுகள்) அடங்கும்.

நான்காவதான 'மோட்சம்' என்பதைப் பரம்பொருளால் மட்டுமே வழங்க முடியும். தட்சிணாமூர்த்தியைத் தொடர்ந்து பூஜிப்பவர்களுக்கு கிரஹங்களின் மூலமாக முதல் மூன்று நற்பேறுகளை அவரே வழங்குகிறார். இறுதியில் ஞானத்தையும் கொடுத்து அந்த ஜீவனுக்கு முக்தியை அருள்கிறார். இதன் பொருட்டே வியாழக்கிழமைகளிலும், குருபெயர்ச்சி தினங்களிலும் தட்சிணா மூர்த்திக்கு விசேஷ பூஜைகள்

நடத்தப்படுகின்றன. ஆன்மிக மெய்யன்பர்கள். இந்த உணர்வு அகலாமல் ஆலமர் கடவுளைப் பூஜிப்பதன் மூலம் இகத்தில் மட்டுமின்றி பரத்திலும் சுகப் படலாம்.

ஒவ்வொரு குரு பெயர்ச்சியின் போதும் அந்தப் பெயர்ச்சி சில ராசி நேயர்களுக்குச் சாதக மாகவும், சிலருக்கு பாதகமாகவும் அமைய நேரிடும். ஜோதிட விதிகளின்படி தங்கள் ராசிக்கு பாதிப்பு ஏற் படவுள்ளதாக அறிகின்ற அன்பர்கள் தீவிரமாக வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர். மற்றவர்கள் பெரிதாகக் கவலைப்படாமல் இருக்கின்றனர். உண்மை என்னவெனில், கிரஹப் பெயர்ச்சி சாதக மாக அமைகின்றவர்களும் தெய்வ பூஜைகளில் குறை வைக்கக் கூடாது. ஏனெனில் இறையருளும் கலந்தே கிடைத்தால்தான் கிரஹங்கள் வழங்கும் அருட் கொடைகளை 'முழுமையாக' அனுபவிக்க முடியும். எனவே எல்லா ராசி நேயர்களுமே இது போன்ற சந்தர்ப்பங்களில் வழிபாடு நடத்துவது அவசியமானது.

ராசிகளைப் பன்னிரண்டாகப் பகுத்தறிந் துள்ளனர் நமது மூதாதையர்கள், அவற்றுள் ''சிம்மம்'' என்பதும் ஒன்று, அண்மையில் நடைபெற்ற குரு பெயர்ச்சியில் கடக ராசியிலிருந்து சிம்ம ராசியில் பிரவேசித்தார் குரு பகவான், இந்தச் சிம்மத்தை அடக்கி ஆள்கின்ற வெகு வெகு அபூர்வமான தட்சிணா மூர்த்தி தமிழகத்திலே கோயில் கொண் டுள்ளார்.

காஞ்சிபுரத்துக்கு தெற்கே இருபத்திரண்டு கி.மீ. தொலைவிலும் உத்திரமேரூரில் இருந்து வடக்கே செல்லும் பாதையில் ஐந்து கி.மீ. தொலை விலும் உள்ளது 'திருப்புலிவலம்'. தேவார வைப்புத் தலமான இந்த ஒப்பற்ற பதியை 'திருப்புலிவனம்' என்று இப்போது அழைக்கின்றனர். இங்கு 'சிம்மத்தை' அடக்கி ஆளும் ஆதி குருவாக தட்சிணாமூர்த்தி வீற்றிருக்கின்றார்.

சோழர்களால் கற்றளியாக மாற்றப்பட்டது. திருப்புலிவனம் ஆலயம். இதனுள் 'வியாக்ரபுரீஸ் வரர்' மூலவராக அருள் பாலிக்கின்றார். 'வியாக்ரம்' என்ற சொல்லுக்கு புலி என்று அர்த்தம். இந்த இறை வனைப் புலியொன்று அன்றாடம் ஆரத்தழுவி வணங்கி, மோட்சம் பெற்றது. அந்தப் புலியின் நகத் தடங்களை இன்றைக்கு சிவலிங்கத்தின் மீது காணலாம்.


அது மட்டுமின்றி அர்ச்சகர் ஒருவரின் கூற்றை மெய்ப்பிக்க தலையில் குடுமியோடு காட்சி தருகிறது இந்தச் சிவலிங்கம். அன்றாடம் வியாக்ர புரீஸ்வர ருக்கு சூட்டிய மாலையை மன்னனுக்குப் பிரசாத மாக அனுப்பி வைத்துக் கொண்டிருந்தார் இவ்வாலய அர்ச்சகர். ஒரு நாள் அதில் முடி இருக்கக் கண்ட அரசன், 'சிவனுக்கென்ன குடுமியா இருக்கிறது?'' பிறகெப்படி இந்த மாலையில் கேசம் வந்தது? என்று சினந்தான். பதற்றத்தில் 'சிவலிங்கத்துக்கு குடுமி உண்டு' என்று சொல்லி விட்டார் அர்ச்சகர். அதை நிரூபிக்க அன்று முதல் உச்சிக் குடுமியோடு மூல ஸ்தானத்தில் விளங்குகிறார் வியாக்ர புரீஸ்வரர். அந்த அர்ச்சகரின் பக்திக்கு நிரூபணம் இந்தச் சம்பவம்.

இப்படிப்பட்ட பெருமைகள் பல உடைய இந்தக் கோயிலில் உள்ள தட்சிணாமூர்த்தி சந்நிதி தனிச் சிறப்பு வாய்ந்தது. தனிக் கருவறையில் இவர் விளங்குகிறார். தனது ஒரு வலக் கரத்தில் ஜப மாலை யையும், மற்றதில் சின் முத்திரையையும் தாங்கி யுள்ளார். மேல் இடக்கரத்தில் அக்னியையும் மற்ற தில் 'சிம்மத்தின் மீது ஊன்றியுள்ள' தன் திருவடி யையும் காண்பித்தபடி அமர்ந்துள்ளார். ஆம்... இந்தச் சிவபெருமானின் வலது திருவடி அபஸ்மாரத் தின் மீதும், இடது திருவடி சிம்மத்தின் மீதும் பதிந் துள்ளது.

இந்த வருடம் குரு பகவான் சிம்மராசியில் தான் பிரவேசித்து உள்ளார். எனவே அனைத்து ராசி அன்பர்களும் இந்தத் தட்சிணா மூர்த்தியை தரிசிப்பது சகல விதமான நற்பலன்களையும் வழங்கும். சிம்ம ராசி நேயர்களுக்கு இந்தக் குரு பெயர்ச்சி 'ஜன்ம குரு' வாக உள்ளதால் அவர்கள் திருப்புலிவனம் தட்சிணா மூர்த்தியைத் தரிசிப்பது மிகவும் சிறப்பானது.

மூன்று சுற்றுப் பிரகாரங்களும் ஐந்து வாயில் களும் உள்ள மூலவர் சந்நிதி... அதன் அருகே நிலவறை ... வெளியே சிம்மத் தூண்கள்... என்று அமைந்துள்ள வியாக்ர புரீஸ்வரர் ஆலயம் ஒப்பற்ற அருள் சக்தி படைத்ததாக விளங்குகிறது.

இங்குள்ள அம்பிகை அமிர்த குசாம்பாள் என்று அழைக்கப்படுகின்றாள். பெயரிலேயே அமுதத்தைத்



தாங்கியுள்ள இந்த தேவதையான தன்வந்திரி அமுதக் கலசத்தைக் கையில் தாங்கியுள்ளார். இந்த அம்பி கையோ அமுத மயமான நெஞ்சகம் கொண்டவள். எனவே இவள் மனதில் நமது நிலைமை பட்டு விட்டால் போதும், கட்டாயம் நோய் நொடிகளை நீக்குவாள். ஆழ்ந்த பிரார்த்தனையும், அழுத்தமான நம்பிக்கையும்தான் ஆன்மீகத்தின் அடிப்படை.

'சிம்ம ராசிக்கு ஒப்பற்ற பரிகார ஸ்தலமாக' விளங்கும் வியாக்ர புரீஸ்வரர் ஆலயத்தை, அந்த ராசி நேயர்கள் யாரேனும் தனித்தோ கூட்டாகவோ செப்பனிட்டு விட்டால், அது மாபெரும் சிவ புண்ணியமாகிவிடும். அதுமட்டுமின்றி அந்தத் திருப் பணியில் சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ பங்கேற்கும் ஒவ்வொருவரின் குடும்பத்தினருக்கும் குரு பகவானின் திருவருள் நிரந்தரமாகக் கிடைப்பது மிக உறுதி. சைவத் திருமுறைகள், சிவ ரஹஸ்யம், சிவ புராணங்கள் போன்ற பல புராதன நூல்கள் ஆலய புனருத்தாரண மகிமைகளைப் பற்றி விளக்குவதாக ஆன்றோர்கள் கூறுகின்றனர். தலைமுறை, தலை முறையாய் குரு பகவானின் நீடித்த அருள் கிடைப் பதற்கு திருப்புலிவன ஆலயப் புனருத்தாரணம் மிகப் பெரிய வாய்ப்பாக அமையும் என்பதில் சந்தேகமே இல்லை.

திருப்பணி செய்யும் அளவுக்குப் பொருள் வசதி இல்லையெனினும் பரவாயில்லை... எல்லா ராசி நேயர்களும், குறிப்பாக சிம்ம ராசி அன்பர்கள் இக்கோயிலுக்குச் சென்று அடிக்கடி தரிசனம் செய்து கொண்டிருந்தாலே போதும்! இந்தச் சிவபெருமானே அவர்களுக்கு நீங்காத செல்வத்தைக் கொடுத்து, திருப்பணி செய்ய வேண்டுமென்கின்ற உள்ளத்தை யும் கொடுத்து, தனது ஆலயத்தைத் தானே செம்மை படுத்திக் கொள்வார். ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே சூழ்க வையகமும் துயர் நீங்கவே!

★★★

# வைகலும் நீலக்குடியும்

- ச. கண்ணபிரான் எம்.ஏ., பிஎட்.,

செம்பியனாம் கோச்செங்கட் சோழனால் கட்டப்பட்ட மாடக் கோயில்கள் எழுபத்தெட்டு என்று அப்பர் பெருமானும், எழுபது என்று திருமங்கை ஆழ்வாரும் குறிப்பிடுகின்றனர்.

''பெருங்கோயில் எழுபதினோடு எட்டும்''

(அப்பர் திருத்தாண்டகம்)

''எண்டோளீசற்கு எழில் மாடம்
எழுபது செய்தான்''

(திருமங்கை ஆழ்வார்)

இத்தகைய மாடக் கோயில்களுள் ஒன்று வைகல் மாடக்கோயில் ஆகும். கும்பகோணம் - காரைக்கால் நெடுஞ்சாலையில் பழியஞ்சிநல்லூர் கூட்டுச் சாலையில் இறங்கி 2 கி.மீ. தெற்கில் சென்றால் இத்தலத்தை அடையலாம். இப்பேருந்து நிறுத்தம் பேச்சு வழக்கில் ''குட்டக்கரை'' என்று தற்போது வழங்கப்படுகிறது.

வைகல் ஊருக்குள் கீழ்த்திசையில் இரு சிவாலயங்கள் உள்ளன. மேற்குத் திசையில் உள்ள சிவாலயமே பாடல் பெற்ற மாடக்கோயில் ஆகும்.

ஊக்கமுடைய அறிவுடையார் வாழும் வைகலில், அழகு வளம் உடைய சந்திரன் தோயும் அளவு உயர்ந்த மாடக்கோயில் என்று சம்பந்தப் பெருமான் கூறுகிறார்.

''உளமதியுடையவர் வைகல் ஓங்கிய
வளமதி தடவிய மாடக் கோயிலே''.

மேலும்

''செய்யகண் வளவன் முன்செய்த கோயில்''

''செம்பியன் கோச்செங்கணான் செய் கோயில்''

''வடமலையனைய நன்மாடக் கோயில்''

என்றும் சிறப்பித்துக் கூறுகிறார்.

இறைவர் பெயர் வைகல் நாதர் என்பதாகும். இறைவியின் பெயர் கொம்பில் இளங்கோதை என்பதாகும். திருச்சுற்றின் வடக்கு மூலையில் திருமகள், பூமிப் பிராட்டி சமேதராக திருமால் காட்சி தருகிறார்.

வைகல் மாடக் கோயிலைத் தரிசித்து முடிந்த பின், முன்பு குறிப்பிட்ட பேருந்து நிறுத்தம் வந்து கும்பகோணம் செல்லும் திசையில் 3 கி.மீ. பேருந்தில் சென்று, திருநீலக்குடி பேருந்து நிறுத்தத்தில் இறங்கி 'திருநீலக்குடி' சிவாலயத்தை அடையலாம். இத்தலம் அப்பர் பெருமானால் பாடல் பெற்றது ஆகும். கல்லுடன் கட்டிக் கடலில் இட்டபொழுது, நீலக்குடியரன் நாமம் கூறிப் பிழைத்தேன் என்று கூறுகிறார்.

''கல்லினோ டெனைப்பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்க என் வாக்கினால்
நெல்லுநீள் வயல் நீலக்குடியரன்
நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேனன்றே''

இத்தலத்தில் இறைவன் பெயர் நீலகண்டேஸ்வரர் என்பது ஆகும். ஆகையால் ஊரின் பெயர் ''திருநீலக்குடி'' ஆயிற்று. இறைவி சன்னிதிகள் இரண்டு உள்ளன. ஒரு சன்னிதியில் அம்மை ''அநூபமஸ்தனி'' என்றும், மற்றொரு சன்னிதியில் ''பக்தாபீஷ்டதாயினி'' என்றும் அழைக்கப்படுகிறாள்.

மூலவருக்குச் செய்யப்படும் எண்ணெய் அபிஷேகம், எவ்வளவு செய்தாலும் இலிங்கத் திருமேனிக்குள்ளேயே சுவறிப்போகும் நிலை மிகவும் வியப்புக்குரியது. அம்பாளே இங்கு எண்ணெய் அபிஷேகம் செய்து பூசித்ததாகத் தல வரலாறு கூறுகிறது. அம்பாள் முன்வைத்து, பின்னர்தான் எண்ணெய் அபிஷேகம் செய்கிறார்கள். இத்தலத்தில் மரண பயம் உள்ளவர்கள் வந்து வழிபட்டு நீலவஸ்திரம், எள் முதலியன தானம் செய்தால் மரண பயம், கண்ட தோஷம் ஆகியன நீங்கும். ராகு தோஷம் உள்ளவர்கள், உளுந்து, நீல வஸ்திரம், வெள்ளி நாகர் உரு தானம் செய்தால் ராகு தோஷ நிவர்த்தி பெறலாம். பஞ்ச வில்வம் தல விருட்சம் ஆகும். மார்க்கண்டேய தீர்த்தம், பிரம்ம தீர்த்தம் முக்கியமானவை ஆகும்.

நாலு வேதியர்க் கின்னருள் நன்னிழல்
ஆலன் ஆலநஞ் சுண்டகண்டத் தமர்
நீலன் நீலக்குடியுறை நின்மலன்
காலன் ஆருயிர் போக்கிய காலனே

(அப்பர்)

★★★

# ஆரூர் திருக்கோயிலும் பதினெண் இசைக் கருவிகளும்

- எம். விஜயரெங்கதுரை, எம்.ஏ., எம்.எல்., பி.ஜி.டி.பி.எம்.,
உதவி ஆணையர்,
இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம், திருவாரூர்.

## தமிழகத் திருக்கோயில்களில் இசை மரபு

தமிழ்நாட்டில் திருக்கோயில் பண்பாடு, ஒரு தலைசிறந்த பாரதப் பண்பாடாக வானளாவ உயர்ந்து நிற்கிறது. அதற்கு தமிழ் நாட்டின் இசைமரபு ஒரு உன்னத பண்பாட்டுச் சின்னமாக விளங்கி வருகின்றது. இவ்விசை மரபு காலத்தால் அழிக்க முடியாத இந்தியத் திருநாட்டின் பாரம்பரிய சான்றாகத் திகழ்கிறது. ஆழித்தேருக்கு உலகப் புகழ்பெற்ற ஆரூர் திருக்கோயில், இசை மரபில் ஒரு தன்னிகரில்லா வரலாறு படைத்திருக்கிறது. அதற்கு அடிப்படை காரணம், ஆரூர் திருக்கோயிலில் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இசைக்கப்பட்டு வரும் பதினெண் இசைக் கருவிகளே ஆகும். ஆரூர் கோயிலில், (இரகசிய) காமிகாகமம் பின்பற்றப்பட்டு, '' ஸோடஸோப சாரம்'' என்ற பதினாறு வகையான வழிபாட்டில், ஆரூர் ஸ்ரீ தியாகராஜ சுவாமிக்கு மிகவும் விருப்பமானதாக கருதப்படும், இசைக் கருவிகள் (இசைக்கலை) மிகவும் அரியவை ஆகும். இவ்விசைக் கருவிகள் தொன்மை வாய்ந்தனவாகும். பல்லவ, சோழ, நாயக்க, மராட்டிய மன்னர்கள் ஆரூர் இசைக்கலையை (இவ்விசை மரபை) ஒரு தெய்வீகக் கலையாகக் கருதி போற்றி வந்துள்ளனர் என்பது வரலாற்றுச் செய்திகள் வாயிலாக அறிய முடிகிறது.

## ஆரூர் திருக்கோயில் இசைமரபு

ஆரூர் திருக்கோயிலில் பதினெட்டு வகையான இசைக் கருவிகள் இசைக்கப்பட்டு வரப்பெற்றுள்ளன. நாதபிரம்மமாக விளங்கும் இவ்வரிய இசைக்கருவிகள், ஸ்ரீ முசுகுந்த சக்ரவர்த்தி தேவலோகத்திலிருந்து ஸ்ரீ தியாகராஜரை ஆரூரில் பிரதிஷ்டை செய்யும் பொழுது கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதற்கான சான்று, ஸ்ரீ சகஜி என்னும் மராட்டிய மன்னர் காலத்தில் தீட்டப்பட்ட ஆரூர் கோயில் தேவாசிரியர் மண்டப ஓவியத் தொகுப்பு வாயிலாகத் தெரிய வருகிறது. தமிழ்நாட்டில், ஏனைய திருக்கோயில்களில் பக்தர்களை மாலை நேர வழிபாட்டிற்கு அழைப்பதற்காகவே இசைக்கருவிகள் இசைக்கப்படுவது பொதுவான மரபு. ஆனால், ஆரூர் திருக்கோயிலில் மட்டும் ஸ்ரீ தியாகராசருக்கு நடைபெறும் சாயரட்சை பூஜைக்கு தேவலோகத்திலிருந்து தேவர்களை வரவழைப்பதற்காக இவ்வரிய இசைக் கருவிகள் இசைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

### 1. பாரிநாயனம் அல்லது பாரி நாதஸ்வரம்

இவ்விசைக் கருவி, ஒரு காற்றுக்கருவி (துளைக் கருவி) ஆகும். ஆரூர் நகர் மட்டுமின்றி, வேறு எங்கும் இப்பாரி நாயனம் இசைக்கப்படுவதில்லை. இவ்வரிய இசைக்கருவி ஆரூர் தியாகராஜருக்கு மட்டுமே உரிய சிறப்பு அம்சமாகும். இவ்விசைக் கருவி, இனிமையான இசையினால் மண்ணுலகையும் விண்ணுலகையும் ஈர்க்கக் கூடியது. பாரி நாயனம், மொத்தம் மூன்று பகுதிகளைக் கொண்டது. மொத்த நீளம் சுமார் இரண்டே கால் அடி (2 ¼) ஆகும். பாரிநாயனத்தின் மேல்பகுதி ''மேல் அனசு'' எனப்படும். இது பித்தளை உலோகத்தினால் ஆனது. சுமார் நான்கு செண்டிமீட்டர் வரை நீளம் உள்ளது. இரண்டாவது பகுதி மரத்தினால் ஆனது. (ஆச்சாமரம்) மரப்பகுதி சுமார் ஒன்றரை அடி நீளம் உள்ளது. கீழ்ப்பகுதி ''கீழ் அனசு'' எனப்படும். இது பித்தளை உலோகத்தினால் ஆனது. எட்டு சென்டிமீட்டர்வரை நீளம் உள்ளது. இவ்விசைக் கருவி, ஏனைய நாதஸ்வரத்தைக் காட்டிலும் அதிக ஒலி எழுப்பக் கூடியது. இதில் மொத்தம் பன்னிரெண்டு (12) துளைகள். எட்டு துளைகள் வரை நேர்கோட்டிலும், மீதம் உள்ள நான்கு துளைகள் பக்கவாட்டிலும் (தலா இரண்டு துளைகள் வீதம்) உள்ளன. மேல் அனசு, சுமார் அரை சென்டி மீட்டர் வரை துவாரம் உள்ளது. இவ்விசைக் கருவியுடன் கெண்டை சீவாளி போன்றவை கூடுதலாக இணைக்கப்பட்டுள்ளன. கெண்டைப் பகுதி, வெள்ளி உலோகத்தினாலானது. இது சுமார் ஏழரை சென்டிமீட்டர் (7 ½) வரை உள்ள குழல் வடிவ அமைப்பில் உள்ளது. சீவாளி என்ற பகுதி சுமார் ஒன்றரை சென்டிமீட்டர் (1 ½) வரை உள்ள குழல் வடிவ

அமைப்பில் உள்ளது. இது நாணல் தட்டையால் ஆனது. இச்சீவாளி மற்ற நாதஸ்வரங்களைக் காட்டிலும் அளவில் சிறியதாக உள்ளது. யானைத்தந்தத்தினால் ஆன ''பாரிநாதஸ்வரம்'', ''தந்த பாரி நாதஸ்வரம்'', என்று அழைக்கப்படுகிறது. சகஜி மன்னர் பாடல்கள், தீட்சிதர் கீர்த்தனைகள், ஸ்ரீ தியாகராஜர் பதம், தேவாரப் பண்கள் மற்றும் திருவாரூர் குறவஞ்சி போன்றவைகள் இவ்விசைக் கருவியில் இசைக்கப்படுகிறது. ஆரூரில் இது ஒரு அரிய இசை மரபாகும். இப்பாரி நாதஸ்வரம், கம்பீர நாட்டை என்ற ராகத்தில் ஆரூர் திருத்தலத்தில், மூலதார க்ஷேத்திரம் என்பதால், ''மந்திர ஸ்தாயி'' என்ற ஒலி முறையிலும் (கீழ் ஸ்தாயி) ''விளம்ப காளத்தில்'' (மிதமான வேகத்தில்) இப்பாரி நாயனம் இசைக்கப்படுகிறது. இதனால், ராகம் மாறுதல் ஏற்பட்டு அபஸ்வரங்கள் ஏற்படுவதில்லை. தினமும் சாயரக்ஷை பூஜையில் ஐந்து அடுக்கு தீப ஆராதனையில் பாரி நாயனம் மற்றும் வீணை, புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன. இப்பாரிநாயனத்தில், ''தகனம்'' எனப்படும் ஒருவித இசை அமைப்பில் (தொகுப்பு) இசைக்கப்படுகிறது. இப்பாரி நாயனத்தை தவிர வேறு எந்த நாதசுர கருவியிலும் இவ்விசையமைப்பு காண முடியாது. முசுகுந்த சக்ரவர்த்தி காலந்தொட்டு பாரி நாதஸ்வரம், ஆரூர் திருக்கோயிலில் இசைக்கப்படுவதால், இது ஒரு தொன்மையான மற்றும் அரிய இசைக் கருவி என்று இசை வல்லுநர்களால் போற்றப்படுகிறது.

இப்பாரி நாயனம், ஆரூர் கோயிலின் இரண்டாம் பிரஹாரத்தில் (நீலோத்பலாம்பாள்) உள்ள நாச்சியார் மண்டபத்தில் சாயரட்க்ஷை வழிபாட்டில், ஸ்ரீ தியாகராஜருக்கு ''மல்லாரி'' ராகத்தில் இசைக்கப்படுகிறது.

ஆரூர் கோயில் நித்ய சாயரக்ஷை வழிபாட்டில் ஸோடஸோப சாரங்களிலும், அலங்கார தீபாராதனை காலங்களிலும், இசைக்கப்படுகிறது. நெய்வேத்தியம் கொண்டு செல்லும் வேளையில் நெய்வேத்திய மல்லாரி இசைக்கப்படுகிறது. பூஜை ஆரம்பித்தபின் ''நாட்டை ராகத்தில்'' ஆரம்பித்து தட்டம் பூஜை நடக்கும் போது தாளம் வாசித்துப் பிறகு தேவாரங்கள், கீர்த்தனைகள், பதங்கள் இசைக்கப்படுகிறது. பூஜை முடிந்தவுடன் இப்பாரி நாதஸ்வரம் நிறுத்தப்படுகிறது. ஸ்ரீகமலாம்பிகை வழிபாட்டிலும், பாரிநாயனம் இசைக்கப்படுகிறது (சாயரட்சை). பங்குனி உற்சவம் ஆரூர் திருக்கோயிலில் நடைபெறும் மிகப்பெரிய திருவிழா ஆகும் (மொத்தம் 22 நாட்கள்). மேற்படி திருவிழா பந்தக்கால முகூர்த்தம் செய்யப்படும்போது, ஆரூர் திருக்கோயில் முதல் பிரகாரத்தில் பாரி நாயனத்துடன் சுத்த மத்தளமும் இசைக்கப்படுகிறது. திருவிழா கொடியேற்றத்தில் (மாசிமாதம் அஸ்த நட்சத்திரம்) பாரி நாயனம் மற்ற இசைக்கருவிகளுடன் இசைக்கப்படுகிறது. (சேமங்கலம் தவிர). ''பரசு ராகம்'' என்ற ராகம் இப்பாரி நாயனத்தில் இசைக்கப்படுகிறது. ஏழாவது நாள் திருவிழா வரை பாரி நாயனம் மற்றும் தவில் ஆகியவை இசைக்கப்படுகிறது. திருவிழா நாட்களில் தினந்தோறும் மல்லாரி, பதங்கள், இராகம், ரத்தி, சர்வலகு வாசிக்கப்படுகிறது. அன்றைய ராகத்தில் வர்ணம் வாசித்த பின்னர் கீர்த்தனை, தேவாரம், அம்பாள் கீர்த்தனை, பதம், குறவஞ்சிப் பாடல்கள் மற்றும் அஷ்டபதிகள் பாரி நாயனத்தில் வாசிக்கப்படுகிறது. ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சுப்ரமணியர் ஆகிய மூர்த்திகள், நான்கு வீதி உலா வரும்போது, குறிப்பிட்ட நான்கு வித ராகங்கள் இப்பாரி நாயனத்தில் இசைக்கப்படுகிறது. சன்னதி தெருவில் பைரவி ராகம், பதம் (அடதாளம்) கீழ வீதியில் ஸ்ரீ ராகம் ''மந்திர ஸ்தாயில்'' இசைக்கப்படுகிறது. தவில் அலரிப்பு முறையில் வாசிக்கப்படுகிறது.

இரண்டாவது கோடி (வீதியில்), மிஸ்ர தாளத்தில் ரத்தி வாசிக்கப்படுகிறது. மூன்றாவது கோடியில், ஸ்ரீ ராகத்தில் (வர்ணம், ஸர்வலகு) வாசிக்கப்படுகிறது. நான்காவது கோடியில், தேவாரம் மற்றும் தியாகராஜர் பதம் வாசிக்கப்படுகிறது. ஐந்தாவது கோடியில் அம்பாள் கீர்த்தனைகள் வாசிக்கப்படுகிறது. ஆறாவது கோடியில், ராகம் மட்டும் மாற்றப்பட்டு பதம் வாசிக்கப்படுகிறது. ஆறாவது கோடியில் ராகம் மட்டும் மாற்றப்பட்டு பதம் வாசிக்கப்படுகிறது. ஏழாவது கோடியில் குறவஞ்சியும், எட்டாவது கோடியில் மீண்டும் அஷ்டபதிகள் வாசிக்கப்படுகின்றன. மேலும், இப்பாரி நாயன இசைக் கருவியில் சாயரட்க்ஷை வழிபாட்டில் பன்னிரெண்டு நிமிடங்களில், கீழ்க் கண்ட ராகங்கள் தேவார பண்களை மையமாக வைத்து இசைக்கப்படுகிறது.

1. சங்கராபரணம்,
2. காம்போதி,
3. யது குளகாம் போதி,
4. சாரங்கா
5. கௌளை,
6. பூரண சந்திரிகா,
7. நவரோஸ்,
8. கேதார கௌளை, மற்றும்
9. ரீதி கௌளை.

மேற்படி பங்குனித் திருவிழா நடைபெறும் காலத்தில் முக்கிய வீதி உலாவின்போது, பாரிநாயனம்

மற்றும் தவில் ஆகியவை மட்டுமே வாசிக்கப்படுகிறது என்று கூறப்படுகிறது. பன்னிரண்டாவது நாள், காட்சிக் கொடுத்த நாயனார் உற்சவத்தின் போது, தீபாராதனை காலத்தில், பாரி நாதஸ்வரம் முதலான பதினெட்டு வகையான இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன. பதிமூன்றாவது நாள், சந்திர சேகரர் பட்டோத்சவம் தீபாரதனையின் போது, பாரி நாயனத்துடன் கொடு கொட்டி, தவில் இசைக்கப்படுகிறது. பதினெட்டாவது நாள் ஸ்ரீ தியாகராஜர் வசந்த மண்டபத்திற்கு எழுந் தருளும் போது, அஜபா நடனத்திற்கு ஏற்ப பாரி நாயனம் தவிர எக்காளம், சுத்த மத்தளம், திருச்சின்னம், வாங்கா, சங்குவாத்தியம், நட்டுவத் தாளம், போன்ற அனைத்து இசைக் கருவிகளும் இசைக்கப்படுகின்றன. இருபத்தி நான்காவது நாள் ஆழித் தேரோட்டத் திரு விழாவில், (பங்குனி உத்திரம்) கொடு கொட்டியுடன் பாரி நாதஸ்வரம் இசைக்கப்படுகிறது. இது தவிர, தெப்பத் திருவிழாக் காலங்களில் (மூன்று நாள் மட்டும்) வீதி உலாவில் பாரி நாதஸ்வரம் இசைக்கப்படுகிறது. மேலும், ஆரூர் திருக்கோயிலில் திருக்குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) நடைபெறும் பன்னிரெண்டு காலங் களிலும், தீபாராதனை நிகழ்த்தப்படும் காலங்களிலும், கும்பாபிஷேகக் குடம் கொண்டு செல்லும் வேளை யிலும், குடமுழுக்கு தொடங்கி சுவாமிக்கு அபிஷேக ஆராதனை முடியும் வரை, பாரி நாதஸ்வரம் இசைக் கப்படுகிறது. கும்பாபிஷேகம் முடிந்து மண்டலாபி ஷேகம் நடைபெறும் காலங்களிலும் பாரி நாதஸ்வரம் இசைக்கப்படுகிறது. பொதுவாக, பாரி நாயனத்துடன் தவில் மட்டுமே இசைக்கப்படுகிறது. பொதுவாக பாரி நாயனத்துடன் தவில் மட்டுமே இசைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. ஆரூரில் மட்டும் பாரி நாயனத்துடன் கெட்டி மேளம் இசைக்கப்படுவதில்லை என்பது குறிப் பிடத்தக்கது. மார்கழி மாத திருவாதிரை திழுவிழா வில், பத்தாவது நாள் உற்சவத்தில், ஆரூர் ஸ்ரீ நடராஜர் வீதி உலாவில் பாரி நாதஸ்வரம் இசைக்கப்படுகிறது. பாரி நாதஸ்வரத்துடன் பேரிகை (முரசு) கொடுகொட்டி (சேமங்கலம் தவிர) சங்கு, எக்காளம், சுத்த மத்தளம், திருச்சின்னம், வாங்கா, நட்டுவத்தாளம் போன்ற அனைத்து வாத்திய கருவிகளும் இசைக்கப்படு கிறது. ஒன்பதாம் நாள் திருவாதிரை திருவிழாவில், சுவாமிக்கு, அபிஷேக ஆராதனை நடைபெறும் பொழுது, பாரிநாயனம் கொடு கொட்டி என்ற இசைக் கருவியுடன் சேர்த்து இசைக்கப்படுகிறது. இப்பாரம் பரிய இசைக் கருவியை சுமார் இருபத்தி இரண்டு தலைமுறைகளாய் இசைத்து வருகின்ற அரிய இசைக் கலைஞர்கள் ''நயினார் அடியார்'' என்று அழைக்கப் படுகின்றனர். இவ்வரிய (இசைக்கலையில்) பாரிநாயன சேவையில், ஆரூர் ஸ்ரீ தியாகராஜர் திருவடியில் தங் களை அர்ப்பணித்துக் கொண்டு, இன்றும் தொடர்ந்து, இவ்வரிய இசைக் கருவியை இசைத்து இவ்விசை



மரபிற்கு சொந்தக்காரராக விளங்கி வருபவர், திரு. செல்வகணபதி ஆவார். இவரது மகன் செ. பழனி யப்பன் என்பவரும் இப்பாரி நாயனத்தை இசைக்க ஒத்துழைப்பு நல்கி ஆரூர் தியாகராஜருக்கு அரியத் தொண்டாற்றி வருகின்றார். பாரி நாதஸ்வர கலைஞர் களுக்கு சோழ, மராட்டிய மன்னர் காலத்தில் மன்னர் மான்யம் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. திருவாரூரில் இப்பாரி நாதஸ்வர கலைஞர்களுக்கு மான்யமாக நிலங்கள், குளங்கள் கோயில் அருகாமை யில் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. சகஜி என்ற மராட்டிய மன்னரால், ஆரூரில் பாரி நாதஸ்வர கலைஞர்களுக்கு ''தந்த பாரி நாதஸ்வரம்'' (யானை தந்தத்தினால் ஆன நாதஸ்வரம்) மன்னர் கொடையாக வழங்கப்பட்ட விபரம் திருவாரூர் திருக்கோயில் வாயிலாக அறிய முடிகிறது.

**2. பஞ்சமுக வாத்தியம் : (குடமுழவம்)**

ஆரூர் திருக்கோயிலில் தனி சிறப்பு வாய்ந்த இசைக் கருவிகளான பாரி நாயனம், கொடு கொட்டி, சுத்த மத்தளம், சங்கு வாத்தியம், ஆகியவற்றுள் முதன்மை பெற்ற இசைக்கருவி இப்பஞ்சமுக வாத் தியம் ஆகும். இப்பஞ்ச முக வாத்தியம், சுமார் இரு நூற்று நாற்பத்தி நான்கு சென்டி மீட்டர் உயரமுடைய (244) வெண்கல, வார்ப்புப் பானையாக உள்ளது. இப் பஞ்சமுக வாத்தியத்தின் மத்தியில் காணப்படும் ஒரு முகம் மட்டும் எழுபத்தைந்து சென்டி மீட்டர் (75 சென்டிமீட்டர்) சுற்றளவு உள்ளது. ஏனைய நான்கு முகங்களில் காணப்படும் வாயின் அமைப்பு 60 செ.மீ.

(அறுபது சென்டிமீட்டர்) சுற்றளவு கொண்டதாகக் காணப்படுகிறது. ஐந்து முகங்களும் ஒரே மட்டத்தில் அமைந்து அடிப்பாகத்தில் அலங்கார வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நான்கு சிங்க முகங்கள் அமைக்கப்பட்டு, இவைகளுடன் இணைக்கப்பட்ட சரத்துடன் நான்கு சிங்கங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இப்பஞ்ச முக இசைக் கருவியின் வாய்ப் பகுதி, மான் தோலால் மூடப்பட்டுள்ளது. இப்பஞ்ச முக வாத்தியம், அதிக எடை கொண்டதாக உள்ளது. இவ்விசைக் கருவி, நான்கு சக்கரங்களைக் கொண்ட மரச் சட்ட அமைப்பின் மீது வைக்கப்பட்டு, ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்ல ஏதுவாக அமைந்துள்ளது.

ஆரம்ப காலங்களில், இப்பஞ்சமுக வாத்தியம் தினந்தோறும் ஸ்ரீ தியாகராஜர் சுவாமிக்கு முன்னர் ஒலிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. சுவாமிக்கு முன்பாக கணிகையர் ஆடும் போதும், சோடச உபசாரத்திலும், சுவாமி புறப்பாட்டின் போதும், அஜபா நடனத்தின் போதும் இப்பஞ்ச முக வாத்யமே ஆதார கருவியாக விளங்கிற்று. ஆனால், தற்போது திங்கள், வெள்ளி ஆகிய நாட்களில் மாலை வேளையில் முதல் பிரகாரத்தில் இசைக்கப்பட்டு வருகிறது.

இப்பஞ்ச முக வாத்தியம், சோழப் பெரு மன்னர்களால் ஆரூர் திருக்கோயிலுக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இன்று இப்பஞ்ச முக வாத்தியம் ஆரூர் திருக்கோயில் மற்றும் திருத்துறைப் பூண்டி ஆகிய திருத்தலங்களில் மட்டுமே ஒலிக்கிறது. சமீப காலம் வரை, திருவாரூர் சங்கரமூர்த்தி முட்டுக்காரர் என்ற பஞ்ச முக வாத்திய கலைஞர், இவ்வரிய இசைக் கருவியை, ''தொம்'', ''தாம்'', ''தொம்'', ''தாம்'', என்ற ''சதுசுரஜதி'', என்ற தாளத்துடன் ஸ்ரீ தியாகராஜர் மண்டபத்தில் ஒலிக்கச் செய்வார். இன்றும் இப்பஞ்ச முக வாத்தியம் சோமவாரம், வெள்ளிக் கிழமை சாயரட்சைஷ பூஜையிலும் ஸ்ரீ தியாகராஜர் புறப்பாட்டிலும் ஸ்ரீ தியாகராசர் சுவாமிக்கு மட்டுமே இசைக்கப்படுகிறது. இது ஆரூர் நகரில் ஸ்ரீ தியாகராஜர் கோயிலின் தனி சிறப்பாகும்.

சோடச உப்சார பூஜையில் ஐந்து வகை தீப தட்டுகள் சுவாமிக்கு வைக்கப்படும். இவை ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் ஆகிய சதாசிவ மூர்த்தியின் அம்சங்களைக் காட்டும் தாளச் சொற்களை இப்பஞ்ச முக வாத்தியம் ஒலிக்கும். அப்போது, ''த தீம், தொம் நம்'', என்ற சொற்கட்டோடு சுவாமிக்கு முன்பு, இக் குடமுழவம் ஒலிப்பது ''எல்லாம் தாங்கள் தான்'', என்று காட்டுவதாகக் கூறப்படுகிறது. அஜபா நடனத்திலும், ஆனந்த தாண்டவம், ருத்ர தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், ஆகியவற்றுக்கும், இவ்விசைக் கருவி ஒலிப்பதாகக் கூறப்படுகிறது. பதினொன்றாம் நூற்றாண்டிலிருந்து ஆரூர் திருக்கோயிலில் இப்பஞ்ச முக வாத்தியம் ஒலிக்கிறது. பரசிவ மரபினர் வழியில் வந்த ''முட்டுக்காரர்''. (பாமரர் வழக்கில் ''நட்டு முட்டு'') என்று அழைக்கப்படும் இசைக் கலைஞர்கள், இவ்விசைக் கலையைப் போற்றி வந்துள்ளனர்.

''கூடரவ மொந்தை குழல் யாழ் முழவினோடும்''

''சல்லரி வாழ் முழவ மொந்தை குழல் தாளமது இயம்ப''

''துடிகளோடு முழவம் விம்மவே''

''பறை மல்கு முழவொடு பாடலாடல்''

''பறை வாழ் முழவும் மறைபாட''.

என்று இவ்வரிய இசைக் கருவி (ஆரூரில் இசைக்கப்பட்டுள்ள) இசை மரபு பற்றி ஆரூர் தேவாரக் குறிப்பின் வழியாக அறிய முடிகிறது.

இப்பஞ்ச முக இசைக் கருவியில் ஒரு முகத்தில் தட்டி ஒலி எழுப்பும் பொழுது இதர நான்கு முகங்களும் அதிர்வடைந்து, ஒரு அரிய தாள ஒலி ஏற்படுத்தி ஸ்ரீ தியாகராஜ சுவாமிக்கு அஞ்சலி செலுத்துகிறது.

பஞ்சமுக வாத்ய லட்சணம் என்ற ஓலைச் சுவடி குறிப்பில்,

''நாட்டிய காலத்தில் கடமுழவம் பாரசைவனால்''


''ஒலிக்கப்படுவது உத்தமம்''


''பாரசைவன் பாரத சாத்திரத்தையும் யாமளத்தையும் கற்க வேண்டும்''

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, பஞ்ச முக வாத்திய இசைக் கலைஞர் பரத கலைப் பற்றியும் அறிந்திருக்க வேண்டும் என்று அறியப்படுகிறது. இதனால் திருநாவுக்கரசர் நாயனார், ''ஆடல் முழவம் அதிரக் கண்டேன்'' என்று பாடியுள்ளார். இத்தாளக் கருவி இந்திய கலை மரபில் தெய்வீகத் தன்மையோடு இந்திய மக்களால் போற்றப்படுவதாகத் தொன்மைச் சான்றுகளோடு முனைவர் குடவாயில் பாலசுப்ரமணியன் தமது ''குடமுழா'' என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

(தொடரும்)

* * *






திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுடன் இணைந்த அருள்மிகு சந்தான வேணுகோபால சுவாமி திருக்கோயில் மகாசம்ப்ரோட்சண விழா 6-11-03 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. தவத்திரு காஞ்சி ஸ்ரீவிஜயேந்திர சுவாமிகள் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள். திருக்கோயில் இணை ஆணையாளர் / நிர்வாக அதிகாரி திருமிகு ஆர். முத்துசாமி பிஎஸ்.சி. பிஎல் அவர்கள் மகாசம்ப்ரோட்சண விழா ஏற்பாடுகளை மிகச் சிறப்பாகச் செய்திருந்தார்கள்.

பதிவு எண். TN / PMG (CCR) / 707 / 03-05 / WPP No. 451





மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தம் ஜூலை மாதச் சம்பளத்தைச் சென்னை அருள்மிகு சக்தி விநாயகர் திருக்கோயில் அன்னதானத் திட்டத்திற்கும், ஆகஸ்ட் மாதச் சம்பளத்தை வல்லக்கோட்டை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் அன்னதானத் திட்டத்திற்கும், செப்டம்பர் மாதச் சம்பளத்தைத் திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் அன்னதானத் திட்டத்திற்கும், அக்டோபர் மாதச் சம்பளத்தை அருள்மிகு ஒப்பிலியப்பன் வெங்கடாசலபதி திருக்கோயில் அன்னதானத் திட்டத்திற்கும் வழங்குகிறார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் சாலை, சென்னை - 600 014.